# இருக்கிறம்

ஒரு பொல்லாப்புமில்லை

15-08-07



## மிரட்டும் இந்திய கிரிக்கெட்

## மீண்டும் வேண்டாத சுயம்

## அழுத்தம்

சாவு சொல்கிற யதார்த்தம்..

## குருவிக் கூடு

மென்பானம்?

# சல்லியான கில்லி


அறிமுக விலை 40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம் சூனியத்தில் இருந்தல்ல தனி மனித நெஞ்சங்களில் பிறக்கிறது

**அறம் தேடும் அறவனடிகள்**

ஒரு பௌத்த துறவி சமூகங்களுக்கு இடையேயான பாலமாகக் கண்டியில் திகழ்கிறார். கண்டி மாவட்டத்தில் அதாரகல்ல எனும் ஊரில் வண.தம்மாலங்கார என்ற பெயரிலான பௌத்த துறவியின் சேவைகள் சமாதானத்தை விரும்பும் அனைவருக்கும் புதியதொரு புத்துணர்ச்சியைத் தருகிறது. தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருந்த தமிழ்,முஸ்லீம், சிங்கள மக்களின் முரண்பாடுகளை தீர்க்கத்தக்க பல்வேறு பயிற்சிகளை இவர் செய்கிறார். கூட்டு மத நிகழ்வுகளின் மூலம் இவர் ஏற்படுத்தும் சமாதானத் தாக்கங்கள் அதீத வலுக் கொண்டவை.






நன்றி
FLICT

21, Siripa Lane, Colombo 05, Sri Lanka
Phone : +94 (0)11-2555247/8, Fax : +94 (0)11-2555249
Email : flict@sltnet.lk

FLICT




பொதுசன நூலகம்
12 FEB 2008
மாநகர சபை
யாழ்ப்பாணம்.
75/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குருவிக் கூடு

தர்மேந்திரா




## வாழைப்பழம்

கீதாவாணி




## மீண்டும் வேண்டாத சுயம்

கே.ஏ.அப்பாஸ்




## கற்பைக் காக்க அமெரிக்காவில் ஒரு கல்யாண வீடு

சாந்தி அனுஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணக்கம் வாசகர்களே!



உங்கள் வரவேற்போடும் எம்மை நெறிப்படுத்தும் மூத்த பத்திரிகையாளர்களின் ஆசிகளோடும் வரும் மூன்றாவது சஞ்சிகையில் சந்திக்கிறோம்.

ஏற்புக்களும் ஏச்சுக்களும் எம்மை வந்தடைகின்றன. 'இருக்கிறம்' என்ற பெயரே தவறு என்று கண்டிப்பவர்களில் நாம் பெரிதும் மதிப்பவர்களும் அடங்குகிறார்கள். எல்லாம் கேட்டபடி நாம் இருக்கிறம்.இந்த நாட்டின் தமிழ்ச் சஞ்சிகைகள் எளிமை காக்க வேண்டுமே தவிர கவர்ச்சி காட்டக் கூடாது என்றும் அனுபவஸ்தர்கள் சொல்கிறார்கள். ஆடம்பரங்கள் அவசியங்களாக மாறுவது வெற்று வெறுமனே நுகர்வுப் பண்டங்களுக்கு மட்டுமல்ல நுகரப்படும் நூல்களுக்கும் ஆனதாகிறது என்றே நாம் நம்புகிறோம். தவிரவும் 'இருக்கிறம்' பெரிதும் கையாளும் எழுத்து நடை ஒருபிராந்தியத்தின் வட்டார வழக்காயிருப்பதும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. இத்தனையிலும் ஒரு மகிழ்ச்சி தொக்கி நிற்கிறது. நாம் எதிர்பார்த்த அவதானம் புதியவர்களான எம்மீது வேண்டிய அளவு திரும்பியிருக்கிறது என்பது அத்தகைய மகிழ்ச்சியில் முக்கியமானது.அடுத்து எவையெல்லாம் விமர்சனங்களுக்கு (ஒன்றைத்தவிர) உள்ளாகும் என்று நினைத்தோமோ அவையெல்லாம் அப்படியே ஆகியிருக்கின்றன. என்னதான் உங்கள் சஞ்சிகையின் அரசியல் என்றும் சிலர் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். நாமோ கரைகளை அமைத்துக்கொள்ளும் நதியாக வருகிறோம். செல்லும் வழியில் நாம் அமைத்துக்கொள்ளும் கரைகள்தான் எம் அரசியல்(வர வர கெட்ட சொல்லாக மாறிவரும் 'அரசியல்' பற்றி நாம் பேச வரவில்லை).

உங்கள் பக்கம் இருந்து வரும் அனைத்து விமர்சனங்களையும் நாம் மிகுந்த மரியாதையுடன் கவனத்தில் கொள்கிறோம். அதே போல எமக்காக நாமே வகுத்துக் கொண்ட தீர்மானங்களின் மீதும் அதீத நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

நல்லவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள், தவறுகளை எமக்கு எழுதுங்கள்.

இருக்கிறம்

# மிரட்டும் ICL

பார்த்திபன்



**இன்று** உலகில் கிரிக்கெட் விளையாடும் நாடு-களின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகளை கதி கலங்க வைத்துக் கொண்டிருக்கிறது நான்கு மாதங்க-ளுக்கு முன்னர் தோன்றிய ICL-இந்தியன் கிரிக்கெட் லீக் (Indian Cricket League).

ஏன் அப்படி என்று பலர் கேட்பது தெரிகிறது. உலகக் கிண்ணத்தில் முதல் சுற்றிலேயே வெளியேறியது இந்-திய அணி. இந்திய அணியின் அந்தப் படுதோல்வி தோற்றுவித்த பிரச்சனைகளின் பூகம்ப எரிமலைதான் ICL. உள்ளூர்ச் சிக்கலுக்காக தோற்றம் பெற்றது, இன்று உலகச் சிக்கல்களை தோற்றுவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையான BCCIக்கு சமமாக இந்தியாவில் கிரிக்கெட்டை வளப்படுத்தும் நோக்கில், ZeeTVயினால் ஆரம்பிக்கப்பட்டது ICL. இதில் பிரபல கிரிக்கெட் வீரர்களான கபில்தேவ், கிரன்மோர் ஆகியோர் இணைந்து கொண்டார்கள். இதன் தலைவராக கபில்தேவ் நியமிக்கப்பட்டார்.

சாதாரணமாக ஒரு தொலைக்காட்சியினால் தொடங்கப்பட்ட குழு, இன்று உலக கிரிக்கெட் அரங்கையே அதிர வைத்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் சுவாரஸ்யம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் தொடர் தோல்விக்குக் காரணம் இந்தியத் தெரிவுக் குழுவே எனச் சாடிய ICL, இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுவதில்லை என்றும் குற்றம் கூறியது. அத்தோடு நின்று விடாது தானே நேரடியாக களத்தில் குதித்தது. இந்திய கிரிக்கெட்டை வளப்படுத்தும் முயற்சிகளை அது தானே ஆரம்பித்தது.

இதன் முதற் படியாக இந்திய வீரர்களுக்கு இடையே வெவ்வேறு அணிகள் உருவாக்கப்பட வேண்டும் என அது கூறியது. அந்த அணிகள் ஒன்றோடு டான்று போட்டியிட்டால் அதுவே சிறந்த பயிற்சியாக இருக்கும் என்று ICL கருதியது. இதன் மூலம் இந்தியாவில் வளமான கிரிக்கெட் சந்ததியை உருவாக்கலாம் என்ற தன் திட்டத்தை முன்வைத்தது.

அணிகளைத் தோற்றுவிப்பதில் உள்ளூர் வீரர்கள் மட்டுமன்றி சர்வதேச அனுபவம் வாய்ந்த வீரர்களையும் இணைத்துக் கொள்வது குறித்து ICL சிந்தித்தது .

வெறும் சிந்தனையில் முடங்காது உடனடியாக அந்த முயற்சியிலும் குதித்தது. உலகக் கிண்ணத்துடன் ஓய்வு பெறுவதாகக் கூறிய வீரர்களுக்கு தூது அனுப்பியது. அனுப்பப்பட்ட தூதுக்கு கைக்கு மேல் பலன் கிட்டியது. மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் அணித்தலைவர் பிறைன் லாரா, அவுஸ்திரேலியாவின் வேக பந்து வீச்சாளர் மெக்ராட்ஸ் போன்ற முன்னணி வீரர்கள் ICL உடன் இணையத் தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். மேலும் பாகிஸ்தானின் இன்சமாம் , அவுஸ்திரெலியாவின் சேன்வோன், நியூசிலாந்தின் பிளெமிங், இலங்கையின் அத்தப்பத்து, சனத் ஆகியோரையும் தன்னுடன் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் ICL தீவிரம் காட்டி வருகின்றது.

இந்திய கிரிக்கெட்டை வளப்படுத்த இந்திய வீரர்கள் ICL உடன் இணைவது நாட்டுப் பற்றுக்காக என்று சொல்லலாம். ஆனால் சர்வதேச வீரர்களும் இதில் ஆர்வம் காட்டக் காரணம் என்ன? ஆம்! இந்திய கிரிக்கெட் லீக் கொடுக்கும் ஒப்பந்தத் தொகையே அதற்கான முக்கிய காரணமாகும். பல கோடி ரூபாய்களை அள்ளி இறைத்தால் யார் தான் விடுவார்கள். தம்மைத் தேடி வரும் வாய்ப்பை அவர்கள் இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்கிறார்கள்.

இந்த நிலைதான் இன்று பல உலகக் கிரிக்கெட் சபைகளுக்கு தலையிடியைக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. குறைந்த சம்பளத் தொகையை பெறும் பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் பலத்த சிக்கலுக்குள் இருக்கின்றன. அவற்றின் பிரதான வீரர்களும் ICL உடன் இணையக் கூடிய ஆபத்துத் தோன்றியுள்ளது. ஏனைய பல நாடுகளின் முன்னாள் வீரர்களை விட்டுவிடுங்கள், ஆனால் இன்னும் ஓரிரு வருடங்களில் ஓய்வு பெறத் திட்டமிட்ட பல வீரர்களும் தமது ஓய்வை அவசரமாக அறிவித்துவிட்டு ICL ல் இணைவதில் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். இதன் ஒரு கட்டமாகவே இலங்கையின் முன்னாள் அணித்தலைவர் மாவன் அத்தபத்து இலங்கை கிரிக்கெட் சபையுடனான தனது ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக் கோருவதையும் அவதானிக்க வேண்டும். உலகக் கிண்ணத்தை இம்முறை அவுஸ்திரேலிய அணிக்குப் பெற்றுக் கொடுத்த ரிக்கி பொன்டிங் ICL தொடர்பான தனது கருத்தைத் தெரிவித்த போது, பல வீரர்கள் விரைவாக ஓய்வு பெற இது வழிவகுக்கும் எனக் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை ICL இல் இணையும் இந்திய வீரர்களுக்கு, ஆயுட்கால கிரிக்கெட் தடை விதிக்கப்படும் என பிறப்பித்த BCCI தற்போது தனது முடிவை மாற்றியுள்ளது. ICL உடன் இணையும் வீரர்களுக்கு BCCI யினால் வழங்கப்படும் கொடுப்பனவுகள் யாவும் நிறுத்தப்படும் என அது அறிவித்துள்ளது. BCCஐன் இந்த முடிவை ICLஇன் தலைவரான கபில் தேவ் வரவேற்றுள்ளார்.

Indian Cricket League








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைகள் பேசுகின்றன

## முற்றத்து மல்லிகை

ஆக.-2007

நகைச்சுவைத் துணுக்குகளுக்கு இலங்கைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் கொஞ்சமேனும் முக்கியத்துவம் காட்டுவதில்லை என்ற வாசகர் குற்றச்சாட்டு கண்டு கொள்ளப்படாமல் இருந்து வருகிறது. 'சிரித்திரன்" காலத்தில் துணுக்குகளுக்கு இருந்த மவுசு அச் சஞ்சிகையின் முடங்கலோடு அருகிவிட்டது. ஈழத்து வாசகருக்கு ஏமாற்றமாக இருந்து வந்த சோகத்துக்கு விடிவு கிடைத்துள்ளது. புதிதாக வந்திருக்கும் "இருக்கிறம்' சஞ்சிகையின் முதல் இதழ் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் துணுக்குகளோடு வெளியாகியிருப்பது வாசகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஈழத்து இதழியல் துறை, வடிவமைப்பில் மிகப்பின் நின்றன. இந்த விடயத்திலும் "இருக்கிறம்" நிறைவாக உள்ளது. கணினி வடிவமைப்பில் அட்டைப் படத்திலிருந்து அனைத்து பக்கங்களும், மணவறை மணமகள் போல் கோலமிட்டுக் கண்களைக் கிறங்க வைத்திருக்கின்றன. ஆங்கில மற்றும் தமிழகச் சஞ்சிகைகளோடு ஈழத்துச் சஞ்சிகைகளும் போட்டியிடும் என்ற நம்பிக்கையை இது ஆழப்பதித்திருக்கின்றது. இவ்விதழ் வடிவமைப்பாளர்களான க.மயூரன், கே.முஜீன் ஆகியோரது அச்சுத் தொழில் நுட்ப ஆற்றல் மெச்சத்தக்கதே! ஈழத்து இதழியல் துறைக்குப் புதியதோர் முகத்தை இவர்கள் கொடுத்திருக்கின்றனர்.

ஒரு வாசிப்பு, ஒரு கருத்துப் பகிர்வு, ஒரு பண்பாடு, ஒரு வகை இருப்பின் பிரதிபலிப்பு இவை எல்லாவற்றையும் ஜனரஞ்சகமாய் உள்ளடக்கும் தன்மையில் "இருக்கிறம்" வருகிறது.... எனவும், 'இருக்கிறம்' சஞ்சிகை அரசியலைக் கையிலெடுக்கவில்லை எனவும் இப்புத்தேட்டின் தமிழ் இலக்கியப் பணியின் எல்லையை வகுத்துக் காட்டியுள்ளனர் ஆசிரியரும் பதிப்பகத்தாரும்.

பல்சுவைத் தகவல்களைத் தரும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், இவ்விதழில் அடக்கப்பட்டுள்ளன. ஜனரஞ்சக வாசிப்புக்கு மட்டுமன்றி தீவிர வாசிப்புக்கும் இரையுண்டு. வாசகர்கள் தமது வாசிப்பை "இருக்கிறம்' சஞ்சிகைக்கு நகர்த்துவது ஈழத்து இதழியல் துறைக்குச் செய்யும் பெருந் தொண்டாகும்.

இச்சஞ்சிகையின் வெளியீட்டாளர்கள், சர்வதேசத் தமிழ்வாசகனும் வாசிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டும். எமது சாதனைகள் குடத்து விளக்காக மறைக்கப்படக் கூடாது.

## மண்ணின் வாசனை

வீரகேசரி 25/07/07

"எப்படிச் சுகமண்ணை" "இருக்கிறம்"
"எப்படிச் சுகம் தம்பி" "இருக்கிறம்" "எப்படிச் சுகம் பிள்ளை" இருக்கிறம்"

யாழ் மண்ணின் வாசனை இங்கு அதிகமாகவே வீசுகிறது. ஏலி ஏலி லெமா சபக்தானி - தேசியனின் அறிவியல் புனைகதை கே.எஸ். பாலச்சந்திரனின் வானொலிக்கால நினைவுகள், சோக்கெல்லோ சண்முகத்தின் பட்சமுள்ள ஆச்சிக்கு பனையடிப்பக்கம் இராட்சத வெளவால் போன்ற அம்சங்களில் இதனை அதிகமாகவே உணரலாம். சுமார் மூன்று மாத காலத்திற்கு மேலாக ரஜினி இரசிகர்களை காத்திருக்க வைத்து திரைக்கு வந்துள்ள படம் சிவாஜி. தற்போது திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. இத்திரைப்படத்தில் வரும் ரஜினியின் தோற்றம் ஒன்று அட்டையை அலங்கரிக்கும் அதேவேளை இத்திரைப்படம் தொடர்பாக யாரும் அறிந்திருக்க முடியாத பலவிடயங்கள் இதிலிடம்பெற்றிருக்கின்றன.

ஈழத்திலும் தமிழகத்திலும், பல சஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. வெளிவர ஆரம்பித்த சூழலிலேயே காணாமல் போயுமிருக்கின்ற இந்நிலையில் இருக்கிறம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பது அனேகரது அவா. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இலக்கிய சஞ்சிகை ஆரம்பித்தால் தீவிர இலக்கிய ஆர்வலர்கள், மேம்போக்கான வாசகர்கள் என்ற இரு பாலாரையும் திருப்திப்படுத்த வேண்டும். சாதாரண வாசகருக்கான இலக்கிய சஞ்சிகை, தீவிர இலக்கியகாரர்களால் நிராகரிக்கப்பட்டு விடும். இந்தச் சிக்கல்களுக்குள் மாட்டிக் கொள்ளாமல், தனக்கெனத் தனித்துவமான பாணியில், வெளிவந்திருக்கிறது 'இருக்கிறம்'. ஆனால், ஆசிரியர் குறிப்பிடுவது போல வாழாமல், இருப்பது இந்நாட்டில் யாழ்ப்பாணத் தமிழர்கள் மட்டும்தானா? ஏன் அவர்களை மட்டுமே அடையாளப்படுத்தும் இருக்கிறம் சஞ்சிகையின் பெயராகியது?

இருக்கிறத்தில் வரும் அனைத்தும் தமிழர்களின் வாழ்வியல் அவலங்களின் சாட்சியங்களாகின்றன. அச்சு ஊடகம் இன்று பெருமளவு முன்னேற்றம் கண்டு வருகின்றது. பத்திரிகையாகட்டும் சஞ்சிகையாகட்டும், காத்திரமான படைப்புகளைத் தாங்கிவருவது மாத்திரமே அதன் வெற்றிக்கும் பங்களிக்காது என்பது இன்று பரவலாக உணரப்பட்டிருகிறது. படைப்புகளின் காத்திரத் தன்மையிலும் பார்க்க பக்க வடிவமைப்பே பார்த்த மாத்திரத்தில் வாசகனைக் கவர்வது. 'இருக்கிறம்' பக்க வடிவமைப்பில் அதிக அக்கறை காண்பித்திருக்கிறது. ஆனாலும் சில ஆக்கங்களில் எழுத்துப் பிழைகளும் உள்ளன. சிவாஜி பற்றிய காரசாரமான விமர்சனம் திருப்திகரமானதாய் இருந்தாலும், அதற்காக சிவாஜியா அட்டையிலும் வரவேண்டும்? இறப்பதற்குத் தனியான காரணங்கள் தேவையா இருப்பதற்கு காரணங்கள் இல்லையென்பதை விட என ஆரம்பிக்கும் கட்டுரை, மற்றும் அதில் காணப்படும் தமிழரின் இருப்பைப் பேசும் ஆக்கங்களில் அனேகம். அஞ்சுவது அஞ்சாமை இழுக்கு, என்பதில் ஆசிரியருக்கு உள்ள அதீத நம்பிக்கையின் சாய்வுக்குச் சான்று.பேசாப்பொருள் பற்றிப் பேசத் துணியாததால் தமிழர்களின் இருப்புக் குறித்த ஒரு பக்க அரசியலைப் பேசுகின்றது இருக்கிறம். 'இருக்கிறம்' தொடர்ந்தும் இருக்கும் எனும் நம்பிக்கையோடு..

தினகரன் 05/08/07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டளைக்குக் கீழ்ப்படிதல்

எமக்குத் தெரிந்ததெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்
நிமிர்ந்து நில்
இலகுவாய் நில்
நேரே செல்
பின்னே திரும்பு
மூக்கை நுழை
முழுதையும் முடி

மொத்தமாக
எமக்குத் தெரிந்ததெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்
கட்டளைக்குக் கீழ்ப்படிதல்

சுட்டவை எவையென
எமக்குத் தேவையில்லை
அப்பாவியாயிருக்கலாம்
குழந்தையாய்,குமரியாய்
கிழவனாய், முடவனாய்
படித்தவனாய்,பாமரனாய்
எதுவாக வேண்டுமானாலும்
கட்டளை கிடைத்தபோது
சுட்டவை எவையென
எமக்குத் தேவையில்லை
சுட்டபின் அவன்

எதிரியாய் இருக்கவேண்டும்
அல்லது ஆகவேண்டும்
என்பது மட்டும்தான்
எமக்குத் தேவை

ஆனால்
அவ்வப்போது
எந்தக் கட்டளையுமே இல்லாமல்
அது விறைத்துக் குறிபார்க்க
தொடங்கி விடுகிறது
எந்தக் கட்டளையையும்
கேட்காமலேயே அது
இலக்கைப் பொசுக்கியும் விடுகிறது
அது என்றும்
கட்டளைகளை
செவிமடுப்பதில்லை
கட்டளைகளை மீறியதற்காக
கட்டளைகூட என்றும்
கோபித்துக் கொண்டதுமில்லை

எனினும்
எமக்குத் தெரிந்ததெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்
கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல்

ச.வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயுமானவன்

**அவன்** வரம் தரும் தன் குலதெய்வத்திடம் என்றுமில்லாமல் கையேந்தினான். 'ஆண்டவனே பத்தாம் வகுப்பில் சித்தி பெறுவதற்காக உனக்குத் தேங்காய் உடைத்தபிறகு எத்தனையோ ஆண்டுகள் கழித்து உன் வாசலில் நிற்கிறேன், எனக்கு நீதான் உதவ வேண்டும்' கண் கலங்கித் தன்னிடம் தவம் இருக்கும் பக்தனைக் காணத் தும்பிக்கையோடு கடவுள் வந்தார்'

'பக்தனே உன் பக்தியை மெச்சினேன்!! உனக்கு வேண்டியது என்ன?'

கூப்பிட்டால் அலுவலகத்தில் பீயோனே வராத இந்த நாளில் ஆண்டவன் உடனேயே வந்துவிட்ட ஆச்சரியத்தோடு செல்லையர் கடவுளைக் கையெடுத்துக் கும்பிட்டார்.


'தயங்காதே செல்லையா உன் பிரச்சனையைச் சொல்' அடுத்த பூசை காத்திருந்ததால்ஆண்டவர் அவசரப் பட்டார்.

'ஒண்டுமில்லைக் கடவுளே! ஒவ்வொரு நாளும் நான் வேலைக்குப் போறன்,எட்டு மணித்தியாலம் மாடா உழைக்கிறன், ஆனால் என்ர மனிசி வீட்டில சும்மாதான் இருக்கிறாள், ஒரு நாளாவது என்ர கஷ்ரத்தை அவள் அனுபவிக்க வேணும். என்னை அவளின்ர உடம்பிலயும், அவளை என்ர உடம்பிலயாயும் மாத்தி விட வேணும், அப்பதான் அவளுக்கு என்ர கஷ்டம் தெரியும்' கடவுள் சிரித்தார்.

'செல்லையா, இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்த ஜனாதிபதி என்றா என்னை நினைத்தாய்?, ஆணைப் பெண்ணாவும் பெண்ணை ஆணாவும் மாற்றும் வல்லமையுடைய ஆண்டவன் நான். நீ கேட்டபடி இன்று நள்ளிரவில் இருந்து நீ அவளாயும், அவள் நீயாயும் மாறக் கடவது' சொல்லிய கடவுள் மறைந்தார்.

பலவித யோசனையோடு வீடு போன செல்லையா அடுத்த நாள் பற்றிய நினைவோடு தூங்கிப் போனார். பொழுது விடிந்தது. கட்டிலின் இடப்பக்கமாகக் கிடந்த மனிசி இவராக எழும்பி வேலைக்குப் போற அவசரத்தில் இருப்பது புரிந்தது. நித்திரையாய்க் கிடந்த ராசனையும், சின்னவளையும் எழுப்புறதே பெரிய காரியமாக இருந்தது. ஐந்தாம் வகுப்பில் வரும் புலமைப் பரிசிலுக்கு அவனக் காலை நேரத்தில முதலில படிக்க விடோணும். எழும்பின நேரம் தொடக்கம் கத்திக் கொண்டே கிடந்த சின்னவளைக் குளிப்பாட்டி, பள்ளிக் கூட உடுப்புப் போட்டு பக்கத்து வீட்டு அங்கிளின்ர பிள்ளையோட பள்ளிக் கூடத்துக்கு ஓட்டோவில அனுப்பியாச்சு. தானே இப்ப ஓரளவு ஆயத்தப் படுத்தினாலும் பள்ளிக்கூடச் சாமான்கள் எல்லாம் சரிபார்த்து அவனைப் பள்ளிக்கூட வான் வாற வரைக்கும் வீட்டு வாசலில் நிக்கச் சொல்லிப்

வெள்ளை உருவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு, இவரைப் பார்த்தா ஏதோ கொதியில நிற்குமாப் போல கிடந்தது. அவருக்கான விடிகாலைக் கோப்பி இன்னும் வைக்காத கொதி. அவருக்கான விடிகாலை கோப்பியில இருந்து (அதுவும் சிகரெட்டும் இல்லாமல் அவருக்கு விடியாது) அலுவலகத்துக்கு கொண்டுபோற சாப்பாட்டுப் பார்சல், காணாமப் போன கண்ணாடி, போடுற உடுப்புக்கான அயர்னிங் எல்லாம் செய்து அவரை அனுப்புறதே பெரிய காரியமா இருந்தது. எல்லாரும் வீட்டால கலைய எட்டரை ஆச்சு.

அவசரமா வெளிக்கிட்டுக் கடைக்குப் போய் மீன் மரக்கறிச் சாமான் சக்கட்டெல்லாம் வேண்டியர நேரம் பத்தாச்சு. வீடு இன்னும் கூட்டேல்லை. வீட்டைக் கூட்டித் தள்ளிப் போட்டுப் பார்த்தா வாசல்லை நேற்று வச்ச குப்பையைக் குப்பைக்காரன் கொண்டு போகாதது தெரிந்தது. அவனுக்குப் போன மாசம் அவன் கேட்ட அம்பது ரூபாவைக் கொடுக்காத கோபம். முனிசிப்பல்ல உழைக்கிறத விட, வீடு வீடா உழைக்கிறதுதான் இப்ப அவையளுக்கு முக்கியம். என்ன செய்ய அதை நைசாத் தூக்கிக் கொண்டுபோய் சில்வா வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற குப்பையளோட குப்பையாப் போட்டாச்சு. தற்செயலா சில்வா வீடு கண்டா கதை கந்தலாகும் என்டுறது வேற விசயம். வீட்டுக்கு அவசரமா திரும்பி உடுப்புக்களை ஊறப் போட்டுட்டு, சமையலைத் தொடங்கியாச்சு. சமையல் பாதியும், உடுப்புத் தோய்க்கிறது பாதியாவும் ஓரளவுக்கு வேலை முடியவும், பிள்ளையள் பள்ளிக் கூடத்தால வரவும் சரியா இருந்தது. சாப்பாடு முடிஞ்ச கையோட ராசனை ரியூசனுக்குக் கொண்டு போய் விடோணும். அதுக்கு முந்தி சின்னவளை நித்திரையாக்கோணும், இல்லாட்டி அவளும் வர நிப்பள். அவளச் சரிபண்ணிக் கிடத்திப் போட்டு, அவனைக் கூட்டிக் கொண்டு ரியூசனுக்குப் போய்வர மூண்டு மணியாச்சு. வீட்டை வர அரை நித்திரையில எழும்பி யோசிச்சபடி சின்னவள் இருந்-தாள். பாவமாக்கிடந்துது. அவளுக்கு மாக் கரைச்சுக் குடுத்துப் போட்டு, அவனுக்கு கணக்குப் படிப்பிக்க தொடங்கியாச்சு. இடையில வந்த லோன்றிக்காரன் சேட்டை மாறிக் கொண்டந்திட்டான், அவனோட மல்லுக் கட்டவே பின்னேரம் கடந்திட்டுது. அவர் வரேக்க ஏதாவது கொறிக்க இல்லாட்டா கொலையே பண்ணிப் போடுவர்

கடலையை கொஞ்சம் தாளிக்க அவரும் வந்தாச்சு. கடலையையும் ரீயையும் கொடுத்துப் போட்டு இரவுச் சமையல் தொடங்கி முடிக்க நேரம் இரவு எட்டு. சாப்பிட்ட பிறகு செய்தி பாக்கிறவருக்கு, சக்தியில செல்வி நாடகம் முடியிற நேரம் ஒரு கப் பசும்பால் தயாரா வச்சிருக்கோணும். அதையும் சுட வச்சுக் குடுத்து, பிள்ளையளுக்கும் சாப்பாட்டைக் கொடுத்திட்டுப் பிறகு பேணி பாத்திரம் கழுவி நான் கட்டில்ல சாய மணிக்கூடு இரவு பத்தைத் தாண்டி இருந்தது. அருகில கிடந்தவர் இன்னும் பக்கமா வந்தார். எல்லாம் முடிஞ்சது. அடுத்த நாள் விடிந்தது. விடிந்ததும் விடியாததுமாக யாரும் எழும்பா நேரம் அதிகாலைப் பூசைக்கு கோயிலுக்குப் பறந்தார் பெண்ணாக செல்லையர்.

'என்ர கடவுளே! போதுமையா போதும். நான் கேட்டபடி இன்-னும் கொஞ்சத்தில என்னைப் பழையபடி செல்லையாவாக்கிப் போடு, அவள் படுற கஷ்டம் இப்பதான் விளங்குது, எல்லாத்-துக்கும் நன்றி கடவுளே' எல்லாம் விளங்கிய தெளிவில் இருந்த செல்லையரைப் பார்க்க கடவுள் சிரித்தபடி வந்தார்.

'முடியாது செல்லையா இன்னும் ஒன்பது மாதத்துக்கு நீ ஆணாக மாறேலாது'

'என்ர சாமி !! ஏன் அப்பிடி'

'ஒண்டுமில்லைப் பக்தா, ராத்திரி நீ கர்ப்பம் ஆகி விட்டாய்'

கலியாணமே கட்டாத கடவுள் சிம்பிளாகச் சொல்லி விட்டு மறைந்தார். செல்லையா பாவம் சிலையாகி நின்றார்.

# மாறவே மாறாதவை

இளையராஜாவின் லண்டன் ரோயல் பில்ஹார்மானிக் இசைக்குழுவை இயக்கிய அமெரிக்க இசையமைப்பாளர் ஜோன் ஸ்கார்ட் தமிழ்ச்சினிமாவின் பாடல் வரும் சூழ்நிலைகள் பற்றிக் கேட்டபோது இளையராஜா தந்த சூழ்நிலைகள்.


தாலாட்டு , காதற் பாடல்,
காதலியைக் காதலன் கிண்டல் செய்வது அல்லது காதலனைக் காதலி கிண்டல் செய்வது,
கதாநாயகன் தன்னைப்பற்றித் தானே பெருமையாகப் பாடிக் கொள்ளுதல், கூட இருப்பவர்களும் சேர்ந்து கொள்வது
விசேஷங்களான நலுங்கு, பிறந்த நாள், குடும்பத்தின் பந்த பாசம், நாட்டுப்பற்று, மனித நேயம், சமூகவிரோத எதிர்ப்பு, சமூகச் சிந்தனையுள்ள ஏழைகளின் குமுறல் அவ்வளவுதான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன் சுந்தருக்கு நன்றிகள்




# வீட்டில் ஒரு நாடகம்

பட்டினத்தடிகள்

பாத்திரங்கள்
கணவன்
மனைவி

இடம்- வீடு

நேரம் - கணவன் நித்திரையால் எழும்பி கொட்டாவிகூட விடுவ-தற்கு முன் (நித்)திரை விலகு-கிறது

மனைவி: மாப்பக்கற்றும், சீனி-யும் வாங்க வேணும்.

கணவன் : மாப்பக்கற்,முந்தநாள் தானே வாங்கினது!

மனைவி : அது எங்களுக்-கெல்லோ!

கணவன் :அப்ப இது ஆருக்கு,

மனைவி : சின்னனுக்கு, வண் பிளஸ்

கணவன் :வண் பிளசும், ரூ பிளசும் எல்லாம் ஒண்டுதான்.

மனைவி :ஒண்டென்டால் ஏன் வேற வேறயா விக்கிறாங்கள்?

கணவன் : அது வியாபார, ஏமாத்து

மனைவி: ஏமாத்தென்டால் ஏன் ரிவியில காட்டுறாங்கள்.

கணவன்: அதில என்ன கோதாரி-யத்தான் காட்டேல்லயப்பா,அது விளம்பரம்

மனைவி : உண்மை என்ட படியால் தானே விளம்பரம் செய்யிறாங்கள்.

கணவன் : உண்மையைப் பற்றி ஆர் பாக்கிறது? எல்லாம் காசுக்குத்-தானே?

மனைவி :அது அந்த வயசுப் பிள்-ளைக்குத் தேவையான சத்துகளைச் சேர்த்திருக்குதாம்.

கணவன் :என்ன சேத்தாலும் அது மாட்டுப் பால் தானே?

மனைவி:பின்ன என்ன மாசற்ற பாலே பக்கற்றில அடைக்கி-றாங்கள்.

கணவன்:மாட்டுப் பால்தான், எப்பிடி எப்பிடிச் செய்யிறாங்-களோ தெரியேல்லை.

பொதுசன நூலகம்

மனைவி:வெளிநாட்டில இருந்து இறக்குமதி செய்யிற-தெண்ட படியால் நல்லதாத்-தான் இருக்கும்.

கணவன்:வெளிநாடென்டபடியால தான் எனக்குப் பயம்

மனைவி: ஏன்?

கணவன் : ஏற்றுமதி செய்-யிறதுக்காக பிறிச வேட்டிவ்ஸ் போட்டிருப்பாங்கள்.

இறக்குமதி செய்யிற இடத்தில றேய்ஸ் போட்டு செக் பண்ணு-வாங்கள்.

மனைவி : எத்தின லட்சம் சனம் வாங்கிக் குடிக்குது உங்களுக்குத்-தான் ஒரு நொட்டை.

கணவன் : அதில்லையப்பா, இறக்-குமதி செய்யிறத விட, உள்ளுர்ச் சா-மான் நல்லம் எண்டு சொல்லுறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனைவி** : இறக்குமதி எண்டு எப்படி சொல்லுவியள்? அது எங்கட நாட்டு உற்பத்தி எண்டு சொல்லுறாங்கள்.


**கணவன்** : இஞ்சயோ, எங்க? பெரிய பாக்கில கொண்டந்து சின்ன பாக்கில பக் பண்ணுறாங்கள். ஆக அயர்லாந்துப் பால்மா மட்டும் தான் இஞ்ச செய்யிறாங்கள்? உண்மையில அதுதான் நல்லது.

**மனைவி** : அது சரியில்லயப்பா, தேத்தண்ணிக்கு கரையாது கட்டிகட்டியாக் கிடக்கும். மற்றதுகள் என்டால் ரேஸ்ற்றாயும் இருக்கும்.

**கணவன்** : என்னென்டாலும் மாடு பால் சுரக்கிறது தன்ர கன்றுக் குட்டிக்குத்தான், நாய், பூனை, கரடி யானை குட்டி போட்டாலும் பக்கற் பாலே தேடித் திரியுதுகள். மனுசர் மட்டுந்தான் இரவல் பால் குடிக்கத் திரியிறது.

**மனைவி** : மாப்பக்கற் வாங்கக் காசில்லை எண்டு சொல்லுங்கோவன், விடியக் காலம விண்ணாணம் கதைக்காமல்.

(நடக்கும், அவர் இன்னும் போகவில்லை)





# மெய்யன் பதில்

## மெய்யன் மெயில்

**சாப்பிடுவதற்கு மட்டும் வாயை திறப்பவர்களைப் பற்றி...**

யார் சொன்னது? அடிக்கடி அகலமாகவும் நீங்கள் வாயைத் திறக்கலாம். கொட்டாவி விட மட்டும்

**இந்தத் துச்சாதனர்களுக்கு உறைக்கிற மாதிரி நாலு வார்த்தை சொல்லுங்கள். ஒரே தொல்லையாக இருக்கிறது.**

துச்சாதனிகளை மட்டும் ஏன் விட்டுவிட்டீர்கள். அவர்கள் தங்கள் துகில்களை தாங்களே களைவார்கள். ஒரு பயணம் வெளிக்கிடும் போது பாருங்கள்! உடுத்துவது... பிறகு உரிந்து எறிவது. பிறகு இன்னொன்றை உடுத்துவது... எறிவது பிறகுஅடுத்த சாறி , பிறகு மற்றது ... பிறகு வேறு ஒன்று... பிறகு.. பிறகு ... அவர்களுக்கு துகில் எடுத்து அளிக்க அந்தப் பரமாத்தாவே வந்தாலும் முடியாது. இத்தனைக்கும் பொறுமையாக காத்துக் கொண்டிருக்கும் அவளது 'கொண்டவன்' நிலையைக் கொஞ்சமாவது யோசித்துப் பாருங்கள். ஐயோ பாவம்! பாவம்த்மா அது!!

**தலைநகரில் பெருகும் வன்வே சிஸ்டம் பற்றி**

ஒருவழிப்பாதை போக்குவரத்தில் மட்டும்தான் என்று நீங்கள் நினைத்தால் அதற்கு நாங்கள் ஒன்றும் சொல்லமுடியாது.

**உங்களது வாக்குக் கலைப் படங்களுக்கா? வர்த்தகப் படங்களுக்கா?**

ஒருவன் இன்னொருவனிடம் காசு பெரிதா, மனிதன் பெரிதா என்று ஒரு மடக்கல் கேள்வி கேட்டானாம்! அதற்கு காசுக்கார மனிதன் பெரிது என்று பதில் கிடைத்ததாம்! ஆக வர்த்தக ரீதியாகவும் வெற்றிபெறும் கலைப்படங்களுக்கே எனது பொன்னான வாக்கு.

**உலகிலேயே முதல் தமிழ் வானொலி எங்கு எப்போது தொடங்கியது?**

தமிழன் எப்போதுஅர்த்தமில்லாமல் உளற ஆரம்பித்தானோ அப்போதே தமிழ் வானொலி தொடங்கி விட்டது என்பது மெய்யனுபவம்! ஆனால் ..... இல்... ஆம் திகதி என்கிறது புள்ளி விபரம்.

**ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போவதற்குத் தானே வாகனம் தேவை. அதற்காக ஐந்து நட்சத்திர ஹோட்டேல்களின் வசதியுடனான சொகுசு வாகனங்களை புதுசு புதுசாக ஏன் மார்க்கட்டில் கொண்டு வருகிறார்கள்?**

கேள்வி என்றால் ... இது கேள்வி!! 'மாப்பிளை வந்தார் மாப்பிளை வந்தார் மாட்டுவண்டியிலே பொண்ணு வந்தா பொண்ணு வந்தா பெட்டி வண்டியிலே' என்று பாடிக் கொண்டு கட்டை வண்டியில போய் ஹொட்டேல் லங்கா ஒபரோய் வாசலில் இறங்கி விட்டு செல்போனில் மெய்யனிடம் கேட்க வேண்டிய கேள்வி இது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம் விலையேறிக் கொண்டே போகின்றதே மச்சான். இனியாவது எங்கட பொம்பிளையள் நகை போடுற ஆசையை விடுவாங்களா? - மருது

மச்சான்.. சொல்றன் என்று குறை நினையாதை. பொம்பிளையள் என்னையும் உன்னையும் போல தண்ணியடிக்கினமா? தம்மடிக்கினமா? ஃபிரென்ட்ஸ்ஒகளோடை சேர்ந்து ராப்பகலா சுத்தித் சுதி பண்ணுகினமா? ஏதோ .. தங்கடை ஆசைக்குப் பூட்டி அழகு பாக்கினம். எனக்கும் உனக்கும் அது தேவை தானே மச்சான். அவையளை அந்த லைனிலையே விட்டிட வேணும் அதுதானே எங்களுக்கு நல்லது. இல்லாட்டி எங்களையே எதிர்த்துக் கேள்வி கேட்பினம்! பொறுத்த நேரத்திலை நடப்புக் காட்டுவினம்! ஓமோ...இல்லையோ? இனி ஆத்திரம் அந்தரத்துக்கு விக்கச் சுட, அடைவு வைக்க.. ம்... அதுகள் தானே உடனை கழட்டித் தருகுதுகள். ஆனால் உடனை திருப்பிக் குடுத்திட வேணும். அது ஒரு முதல் மச்சான்.. ஒரு நல்ல முதல். இனியும் உப்பிடி முட்டைலை மயிர் புடுங்கிற விசர்க்கதை கதைக்காதை மச்சான்.

கையடக்கத் தொலைபேசியுடன் எந்நேரமும் விளையாடிக் கொண்டிருப்பவர்களைப் பற்றி.. -சானா.

கற்றது கையடக்கம்!

பெண்ணிலை வாதம் பேசும் பெண்களைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன? - மதுரா

பெண்ணாதிக்கவாதம் பேசாதவரை எனது அபிப்பிராயமும் அவர்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கும்

வீட்டில் சாமி கும்பிடுவதற்கும், கோயிலில் கும்பிடுவதற்கும் வித்தியாசங்கள்? - சபா

வீட்டை விட கோயிலில் செட்டப் அதிகம். (செட்டப் பண்ணுவதற்காகவே கோயிலுக்கு போகிற ஆசாமிகளை சொல்லவில்லை. கோயில் செட்டப்பைச் சொன்னேன்) வீட்டில் ஒரு சாரியை மட்டும் பார்க்கலாம். கோயிலில் என்றால் சாரிகளை மட்டுமல்ல சால்வார் கமீஸ்களையும் பார்க்கலாம். (கைவசம் லேஞ்சி வைத்திருப்பது அந்தரத்துக்கு உதவும். அல்லது அட்லீஸ்ட் அங்க வஸ்திரமாவது உதவும்) கோயிலில் அர்ச்சகர் பூசையும் அருமையான கோயில் பிரசாதமும் கிடைக்கும். வீட்டிலென்றால் செல்ஃப் பூசை. பிரசாதம் ஒன்றும் நிச்சயமில்லை. (சிலவேளைகளில் மண்டகப்படியே கிடைக்கும் என்பது வேறு விஷயம்) வீட்டில் ஒரு கடை கண்ணி உண்டா ஐயா! கோயிலில் என்றால் கடலைக் கடை, ஐஸ்கிரீம் கடை, பூக்கடை, சாக்கடை எல்லாம் உண்டே! (பிளீஸ் ஓல்வேய்ஸ் யூஸ் கிரெடிட் கார்ட் லைக் மீ)எல்லாவற்றையும் விட (கூட்டமில்லாத) கோயில் முழுக்க நிரம்பி வழிகின்ற அந்தக் கற்பூர வாசனையும், குளுகுளு காற்றும், மணியோசையின் கம்பீரமும், பகவான் நாமாவளியும் இருக்கின்றதே! அவை தரும் அமைதியும், மனநிம்மதியும் இருக்கின்றதே! அவற்றையும் கூடவே கொண்டு திரும்பினால், அப்போது வீடும் ஒரு கோயில்தான்!!

அது என்ன ஐசே! மெய்யன் என்று ஒரு மாதிரியுமில்லாத புதுமாதிரியான பெயர்? - மாரி

வீட்டில் மனைவியிடம் அடிக்கடி தேவையில்லாமல் பொய் சொல்லி மாட்டிக் கொள்வதால், அவளே வைத்த காரண இடுகுறிப் பெயர்! மனைவிக்கு மரியாதை!!

கடவுள் ஆண்களை முதலில் படைத்தானா அல்லது பெண்களைப் படைத்தானா? -ரவி

ஆண்களைத்தான். நல்ல பிரதி எடுப்பதற்கு முன் மாதிரிப் பிரதி எடுக்கும் வழக்கம் கடவுளுக்கும் உண்டு.

அரசியலை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை? - ரா. மு.

அது எடுத்துக் கொல்லும் என்பதால்.

சிவாஜி படத்தை அந்தக் கிழி கிழித்த முதலாவது இருக்கிறமுக்கு ரஜினியின் முகத்தை அட்டைப்படத்தில் போட வேண்டிய கட்டாயம் இருந்தது. அது பைத்தியக் காரத்தனமாக தெரியவில்லையா? - ஷணுகல சிறீ

உண்மையாகவே அது பைத்தியக் காரத்தனம்தான் ஆனால் சத்தியமாக அது முட்டாள்தனம் அல்ல.

இருக்கிறம் என்ற வினைச் சொல்லை இதழில் பெயராக வைத்தது சரிதானா? இளங்கோ-

இது ஒன்றும் முதற்தடவை அல்ல. 'சிரித்து இரன்' தான் எல்லோரும் ஒருகாலத்தில் ரசித்த 'சிரித்திரன்'.

வாசகர்களே உங்கள் கேள்விகள் வரவேண்டிய முகவரி
இருக்கிறம், 3.ரொரிங்டன் அவனியூ, கொழும்பு 7. மின்னஞ்சல் irrukiiram@gmail.com

## கடலே .......!

எப்படித்தான் முடிகிறது உனக்கு..?
எங்கண்டை வீட்டுக்குள்ளேயே வந்து
எத்தனையோ பேரை – அள்ளிக்கொண்டே
துடிக்கத் துடிக்கக் கொல்லிப் போட்ட பிறகும்
என்னவோ 'அலை'யளைப் போல
அமைதியாயே இருக்க
எப்படித்தான் முடியுதோ உனக்கு...


பாரான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிடு மூஞ்சி அகராதி



அன்னை - தியாகத்தின் மறுபெயர், அன்பின் வடிவம் மாமியார் ஆகும்வரை.

அச்சம் - மடம் நாணம் பயிர்ப்பு போன்றவற்றுடன் சேர்ந்த குணம் பெண்களிடம் இல்லாதது. பெண்களிடம் நமக்கு இருக்க வேண்டியது.

அன்பு - தாய்க்கும் பிள்ளைக்கும், கணவனுக்கும் மனைவிக்கும், நண்பருக்கும் நண்பருக்கும் இடையே சில சமயம் இருப்பது.

இன்பம் - அனுபவிக்க முடியாத வயசில் கிடைக்கும் சந்தோஷம்.

ஆறுதல் - சொல்வதற்கு எளிது பெறுவதற்கு அரிது.

அலுவலகம் - சில சமயம் வேலை செய்ய ஏற்பட்ட இடம்.

கடுப்பு - பிறர் நம்மைப் பற்றிச் சொல்லும் போது ஏற்படுவது.

அம்மி - 1.மலையாளிகள் அம்மாவை அழைப்பது
2. கல்யாணத்தில் மிதிப்பது. கல்யாணத்துக்கு அப்புறம் அரைப்பது.

ஆர்வம் - சொந்தக் காரியத்தில் காட்டும் தீவிரம்.

அப்பேத்கார் - இந்துவாகத் தாழ்த்தப்பட்டு பௌத்தராக உயர்த்தப் பட்டவர்.

ஆரோக்கியம் - இழந்தவுடன் மிகவும் விரும்பப்படும் நிலை.







இரங்கற்பா - தாமதப் புகழ்ச்சி.

அறிவுரை - பிறர் மேல் பரிசோதனை

மரணம் - எனக்கு மட்டும் இல்லாதது.

ஆறறிவு - மனிதனுக்கு மட்டும் உள்ள முட்டாள் தனம்.

பகுத்தறிவு - நல்லதையும் கெட்டதையும் அலசிப் பார்த்து கெட்டதைச் செய்வது.

அற்பம் - (அல்பம். அல்ப்பம் என்றும் பாடம்) மற்றவன் தானத்தின் அளவு. அதையே நீங்கள் கொடுத்தால் சிக்கனம்.

தாராளம் - தமிழ்ச் சினிமாப் பெண்ணின் மார்பு

அறிவியல் - பரிசோதனை ரீதியான மூட நம்பிக்கை.

அறங்காவலர் - இரும்புக் கடைக்காரர்.

கற்பு - 1. கண்டு பிடிக்காத வரை உள்ள நற்பண்பு.
2. பெண்களுக்கு மட்டும் இருக்க வேண்டிய குணம். ஆண்களிடத்தில் இருந்தால் அதன் பெயர் இயலாமை.

இனிப்பு பண்டம் - டயபடிஸ்காரர்கள் ரகசியமாகச் சாப்பிடுவது.


அறிவு - நிச்சயம் உமக்கு இருப்பது. இல்லையேல் (சுஜாதாவிடம் கடன்பட்ட)இந்த அகராதியை ஏன் படிக்கிறீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பெரும் வினா

நீ.பி. அருளானந்தம்



**கொழும்பில்** சீவிக்கும் எனக்கு, இப்போது வவுனியா நகரம் தொலை தூரப் பிரதேசமாகி விட்டது. என்றாலும், அங்கு சென்று, என் நினைவில் இன்றும் பசுமையாக இருக்கும் சில இடங்களைப் பார்த்தேன்.

பழங்காலத்துச் சின்னங்களாக நினைத்துக் கொண்டு அங்கே நான் தேடித் திரிந்தது பெரும் பெரும் மரங்களைத்தான்!

பெரிதாய் வளர்ந்தெழுந்த அந்த மரங்களை வெட்டித் தள்ளி விட்டு, அங்கே சிலர் மாளிகை மாதிரி இப்போது தமது வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். ஆனாலும், என் வீட்டுக்குப் பக்கத்திலேயுள்ள பெரியதொரு ஆலமரம் தப்பித்துக் கொண்டது. அது வைரவர் கோயில் வளவுக்குள் அடை பட்டுக் கொண்டதால் அதற்கு வாழும் வாய்ப்பு.

அந்த மரத்தைப் பார்த்ததும், ஓர் அந்தரங்க நண்பனைப் பார்த்த உணர்வு எனக்கு ஏற்பட்டது. மரத்துக்குக் கீழே போய்க் கொஞ்ச நேரம் நிம்மதியாக நின்றேன். நிழலும் குளிர் கலந்த காற்றும், உடலில் பட்ட போது இதமாக இருந்தது. என் சிறு வயதில் அந்த மரத்துக்குக் கீழே நான் கிளித்தட்டு விளையாடியிருக்கிறேன். என் சின்ன வயதுத் தோழர்களோடு அந்த இடத்தில் காலம் கருதாது போளை விளையாடிய நாட்கள் நினைவில் வந்தன. பொழுது படு மட்டும் வீட்டார் பேசுவார்களே என்பதையும் மதிக்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது விளையாடுவோம், என்றாலும், இருட்டாக இருட்டாக விளையாட்டு ஆவலோடு மனதில் ஒருவித பயமும் கலந்திருக்கும்.

சொல்ல முடியாத வாழ்வாய் என் இளமைக் காலத்தை வைத்திருந்த அந்த இடம் அடையாளம் காண முடியாதபடி மாறியிருந்தது.

நான் அப்படியே கடை வீதிக்குப் போகும் பாதை வழியாக நடந்து போனேன். நான் கடை வீதிக்குள் நுழைந்ததும் தொலை துாரத்திலிருந்து குண்டு வெடிக்கும் சப்தம் கேட்டது. அந்தச் சத்தத்தோடு கடை வீதியெங்கும் ஒரு திடீர்ப் பரபரப்பு சூழ்ந்து கொண்டது. தெருவெல்லாம் சோம்பேறித் தனமாக நடமாடிக் கொண்டிருந்த ஆண்களும், பெண்களும் சுறு சுறுப்பாக விரைந்தார்கள். நானும் பயத்தில் எலும்புகள் நெகிழ்ந்து கொடுக்க, ஒரு வித சாமியாடலோடு நான் தங்கியிருந்த வீட்டுக்கு அவசரமாகப் போய்ச் சேர்ந்தேன்.

அந்த வீட்டுப் படலையை திறந்த போது தான் என்காலைப் பார்த்தேன். "காலில் போட்டிருந்த என் செருப்புகள் எங்கே?"

தொலைந்துபோன செருப்பின் யோசனையோடு நான் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தேன். துவக்குகள் சகிதம் சயிக்கிள்களில் பல ராணுவத்தினர் வீதியில் போய்க் கொண்டு இருப்பதை அவதானிக்க முடிந்தது.

"உங்காலிப்பக்கமா எங்கயோ ஒரு சத்தம் கேட்டது என்ன.?" என்று சொல்லிக் கொண்டு கேற்றடிப் பக்கமாக வந்தார் என் உறவினர்.

"செருப்ப வெளியால கழட்டிப் போட்டிட்டு முருகன் கோயிலுக்க நிண்டு நான் அப்ப கும்பிட்டுக் கொண்டு நிண்டனான்..... சத்தம் கேட்டதோட அப்பிடியே அம்பாலிச்சுப் போய் செருப்பையும் காலில கொழுவாம பதட்டத்தில வந்திட்டன்...!" என்றேன் நான்.

"அட அநியாயத்தை!" - என்றபடி தன் பார்வையை உடனே என் காலில் படியவிட்டவர் பிறகு பார்வையை விலக்கி என்னைப் பார்த்தபடி வழிந்தார்.

இல்லையில்லை நான் சொன்னது உண்மையில்லை பொய் என்று அவர் சொல்லப் போகிறாரோ? என்று அவர் பதில் சொல்லவும் எனக்குள்ளே நான் நினைத்தேன். இப்படியான ஒரு சூழ்நிலையில், பயப் பீதியில் , ஏற்படும் அவசரங்களில் எங்கேயும் என்னவும் பிழைகள், தப்புகள் ,இழப்புகள் நடந்து விட்டால் அதிலிருந்து தப்பிக் கொள்வதற்கு எதைச் சொன்னாலும் அதை உண்மையென்று எல்லாவற்றையும் நம்புகிறவர்களாக நம்மவர்கள் இருக்கிறார்கள். ஒன்றுக்கு ஒன்று பொருந்தக் கூடியதாக எந்த ஒரு பொய்யையும் சோடித்து இவ்விடங்களில் உள்ளவர்களுக்குக் கூறி அவர்களை நம்பச் செய்து விடலாம். அப்படியான ஒரு காலமாக மாறி விட்டது இந்தக்காலம்! எதைத் தங்கள் காதால் கேள்விப்பட்டாலும் உடனே அதை நம்ப ஆரம்பித்து விடுகிறார்கள். பொய் என்றே ஒன்று இல்லை என்பதான நிலை எல்லோர் மனதிலும் இப்போது வேரூன்றி விட்டது. கேள்விப்படுவது எல்லாமே அவர்களுக்கு உண்மைதான் என்ற நிலைமை வரவர அவர்கள் மனதில் வேரூன்றி விட்டது.

உண்மை உண்மை உண்மை என்று அவர்கள் எல்லாவற்றையும் நம்புகிற நம்பகத்தன்மையை நான் எனக்குள் ஒரு கணம் நினைத்துப் பார்த்தேன். அதை நினைத்ததும் என் பாட்டுக்கு சிரித்தும் கொண்டேன். நான் சிரிப்பதைப் பார்த்து விட்டு அவரும் என் கூடவே சிரித்தார்.

நான் என் பாட்டுக்கு எதையோ நினைத்துச் சிரிக்கிறேன். ஆனால் அவர், என்ன விளக்கத்தோடு இப்போது என்னைப் பார்த்துச் சிரிக்கிறார் என்று ஒரு வினா என்க்குள்ளாக எழுந்தது.

அவரது சிரிப்பு ஒரு அர்த்தமில்லாத வெறும் சிரிப்புப் போல அவ்வேளையில் எனக்குத் தெரிந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவு சொல்கிற சேதி...

வி. பராபரன்

வாழ்வில் சாவா?, சாவில் வாழ்வா? சாவிலும்சாவா?-என
போட்டி போடுகிற சாவோடு ஒரு பேட்டி,

நான் சொன்னேன்..
நான் செத்துப் போனால், வரலாற்றில் திருப்பு முனையாகலாம்...
உலகம் பேசிக்கொள்ளும் - நிமிர்ந்ததென் நெஞ்சு
வாழ்ந்திருந்தால் முடியாததை சாவு செய்து விடும்...

சாவு சொன்னது
அப்படி இருக்க வேண்டிய கட்டாயம் ஏதுமில்லை

ஓம்... ஓம்...
அரசியலிலாவது ஏதும் நிகழுமே !

அவ்வாறு நடப்பதற்கும் அவசியமில்லை

அதுவும் சரிதான்...
வரலாறாய் இல்லாட்டியும் வரலாற்றிலாவது ஏதும் எழுதப்படுமே!

அது வரலாறு யாரால் எழுதப்படுகிறது என்பதில்
தங்கியுள்ளதால்- அதுவும் நிச்சயமில்லை

அப்படி என்றால்
ஒட்டு மொத்த வரலாறு ஒன்று
என்னையும் சேர்ந்து புள்ளிவிபரம் வெளியிடுமே!

அதுவும் நீ செத்துப்போனாய் என்று உறுதியானால்தானே!
அல்லது உறுதிப்படுத்து மட்டும்
எலும்புக் கூடு உக்காமல் கிடந்தால் தானே...

அப்போ ஊர்கூடி அழுதுவிடும் ஒப்போடு மட்டுமே
என் சாவு முடியுமோ

அதுவும் உன் ஊரில் உனது சாவுதான் முதலாவது என்றால்,
அத்தோடு எமது வாழ்வுபற்றிய உனதாரின் புரிதலிலும் அது தங்கியுள்ளது

அப்ப எங்கண்டை சாவென்ன
இந்தளவு மலிவாய்ப்போனதோ...?

யார் சொன்னது மலிவென்று?
மலிவான தொழிலொன்றை இந்தளவு அக்கறையோடை
யாரும் செய்வினமே?
உங்களிலை அரைவாசிப்பேர் செத்துப் போனாலும்- அப்போதும் கூட
சாவு இப்போது போன்றே பெறுமதியானதாயே இருக்கலாம்,
அப்போதும் சாவு பற்றி
சிந்திக்கிற மாதிரி சிந்திக்காத வரைக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விமானங்களும் விளக்கங்களும்




இத்தாலிய விமானம்

**ALITALIA**

ALITALIA = Always Late In The Air, Late In Arrival

பறக்கும்போதும் நேரம் தாழ்த்தும்
இறங்கும்போதும் நேரம் தாழ்த்தும்



பிரித்தானிய விமானம்

**BOAC**

BOAC = Better on a camel

ஒட்டகத்தில் போவது நல்லது




பெல்ஜிய விமானம்

**SABENA**

SABENA = Such A Bloody Experience Never Again

மீண்டும் நிகழக்கக்கூடாத மோசமான அநுபவம்





கனடிய விமானம்

**PWA** Pacific Western Airlines

**PLEASE WAIT AWHILE AIRLINES**

தயவுடன் பொறுக்கச் சொல்கிற விமானசேவை




**PIA**

பாகிஸ்தானிய விமானம்

PIA = Please, Inform Another

(பறப்பதற்கு முன்னர்) அடுத்தவனுக்கு அறிவி




யூகோஸ்லாவிய விமானம்

**JAT**

JAT = Joke About Time

நேரத்தின்மீதான கேலி

இலங்கை விமானத்தை எப்படிச் சொல்லலாம்??
எழுதுங்கள். காத்து 'இருக்கிறம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிக் கூடு

**28 ஜூன் 2007**




என் மனைவிக்கு என் மீது சரியான கோபம். திருமணம் செய்த பெண்கள் பொதுவாக தங்கள் கோபத்தை ஆண்களுக்கு காட்டும் நேரம் இரவாகத்தான் இருக்கும் போலும். என்னோடு இனிமேல் கொண்டாட்டமே இல்லையென்று இரவான இரவு நேரத்தில், செய்கையாலும், சைகையாலும் சொல்லி விட்டாள். எல்லாம் இந்தக் குருவிக் கூட்டால் வந்த பிரச்சனை தான்.

**தர்மேந்திரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவளுக்கு இந்தக் குருவிக் கூட்டை அகற்றுவதால் எந்தவொரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை. ஏன் அகற்ற வேண்டும் என்று கேட்டால் 'சும்மா' என்று பதில் சொல்லி விடுவாள். ஆரம்பத்தில் அவள் விளையாட்டாகத் தான் கேட்டு வருகிறாள் என்று நினைத்தேன். ஆனால் அது நாளடைவில் நச்சரிப்பாக மாறி விட்டது. என்னைக் கேட்டால் அந்தக் குருவிக் கூட்டைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு ஒரு அலர்ஜி என்று தான் சொல்வேன். ஒரு உளவியல் பிரச்சனையாக கூட அது இருக்கலாம். இன்று இந்த விடயம் விபரீதமாகி விஸ்வரூபம் எடுத்ததது. அவள் கோப மலையின் உச்சாணிக் கோபுரத்தில் நின்றாள். ' சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப் போல் வடிவு கொண்டாளாய்'க்காட்சி தந்தாள்.

நாங்கள் யாழ்ப்பாணத்தின் சிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அகதிகளாக கொழும்புக்கு ஓடி வந்தவர்கள். ஓடிவந்து இன்றுடன் பதினைந்து வருடங்கள் ஆகின்றன. வியாபாரம்தான் எனக்குத் தெரிந்த தொழில் என்பதால் வெள்ளவத்தைப் பகுதியில் சிறிய ஒரு கடையொன்றை வாடகைக்கு எடுத்து நடத்தி வருகிறேன். அதைக் கடை என்று கூறுவதற்கு பதிலாக எங்கள் இருவரதும் வாசஸ்தலம் என்றால் மிகவும் பொருத்தமாக இருக்கும். எனது கடையின் ஒரு பகுதியை நானும் மனைவியும் வீடாக பயன் படுத்துகிறோம் என்பது இதன் இரகசியம். எனது கடையின் கட்டிடத்தோடு சேர்ந்ததாக ஒரு கொய்யாமரம். அந்த கொய்யா மரத்தின் மேல்தான் எங்கிருந்தோ வந்த ஜோடிக் குருவிகள் கூடு கட்டி வாழ்கின்றன. அந்தக் குருவிகளாலோ, கூட்டினாலோ எங்களுக்கு எவ்விதத் தொல்லையுமில்லை. குருவியின் எச்சங்கள் கூட நிலத்தில் விழுந்து மண்ணோடு மண்ணாகிப் போய் விடுமே தவிர எங்கள் தலைகளில் கூட விழுந்தது கிடையாது. ஆனால் என் மனைவி அந்தக் குருவிக் கூட்டைப் பார்த்த நாளிலிருந்து அது அகற்றப் பட வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தாள். ஆரம்பத்தில் கொஞ்சிக் கேட்டாள், கொஞ்ச நாள் கழிய கெஞ்சிக் கேட்டாள். இப்பொழுது மிஞ்சிப் போய் விட்டாள். போதாக் குறைக்கு கடைக்கு வந்து போன ஒரு கிழவி சொல்வதற்கு வேறு ஒன்றும் கிடைக்காமல் குருவிக் கூடு உங்களுக்கு சரியில்லை, சகுனப் பிழை என்று இன்று காலையில் சொல்லி விட்டுப் போய் விட்டாள். அவள் சொன்னது சரியோ, பிழையோ என்று எனக்கு மட்டுமல்ல என் மனைவிக்கும் தெரியவே தெரியாது. ஆனால் அவளுக்கு குருவிக் கூட்டை அகற்றுவதற்குப் புதிதாக வலுவான காரணம் கிடைத்து விட்டது. குருவிக் கூடு நாளைக்கு அகற்றப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. நான் வாய் தடுமாறி 'குருவி என்ன உன் தலைமயிருக்கு மேலயா கூடு கட்டி இருக்கு' என்று அதட்டிக் கேட்டு விட்டேன். அது தான் அவள் காளி ரூபம் எடுக்க முதல் காரணமாகி விட்டது. என்னோடு கதைக்காமல் அவள் நெடு நேரமாக இருப்பது என்றால் இதுதான் முதல் தடவை.

நான் அவளுடைய முகத்தைப் பார்ப்போமென்று முயற்சித்தால் கூட மறுபக்கம் திருப்பி விடுகிறாள். எப்படியோ அவள் இப்ப கதைப்பாள் என்ற நப்பாசை இன்னும் மிச்சமிருக்கிறது. கதைப்பதற்கு ஏதாவது வேண்டுமே?. இருவருக்கும் இடையிலான நெடுநேர மௌனத்தை கலைப்பது போல அவள் திடீரென்று கேட்டாள், 'வடக்கு, கிழக்கு ஆக்களைத் திருப்பி அனுப்பப் போகினமாமே?' நான் உடனடியாக ஒன்றும் சொல்லவில்லை. 'அப்பா உங்களைத்தான்' என்றாள்.

'அவர்களுக்கு நாங்கள் இருக்கிறது பிடிக்கேல்லை, உமக்கு ஏன் குருவிக் கூட்டை பிடிக்கேல்லையோ அதே மாதிரித்தான்'. முகத்தைத் திருப்பிக் கொண்டாள். என் குத்தல் பதிலையும் தாண்டி அவள் தானறிந்ததைக் குடைந்து குடைந்து கேட்டாள். நான் அவளுக்கு விளங்கக் கூடியவாறு எனக்குத் தெரிந்தவற்றைக் கூறினேன்.

பேசியபடி தூங்குகிறோம். வீட்டு நிலைமை ஓரளவு சரியானது போலப் பட்டது. கதவை யாரோ தட்டுவது கேட்டது. நேரம் அப்போது அதிகாலை 4.30 மணி. மனைவிக்கு நடப்பது ஓரளவு புரிந்து விட்டது. கதவைத் திறந்தோம்.நாய் பிடிகாரர்கள் நாய்களை நாய் வண்டியில் போட்டுக் கொண்டு போவது போல ... பஸ் வண்டியில் நாம் ஏற்றப்பட்டோம். மனைவி இப்பொழுது கதறிக் கதறி அழத் தொடங்கினாள். பெரிதாக சத்தம் போட்டுச் சொன்னாள் 'அந்தக் குருவிக்கூடு இருக்கட்டும்!!.

யாருக்குமே அவள் சொன்னது புரியவில்லை, என்னைத் தவிர. நான் அந்தத் துன்பத்திலும் இலேசாகச் சிரித்தேன். இந்தமுறை எந்தக் கொய்யாமரத்தை நோக்கியோ, யாருக்குத் தெரியும்.

---

இந்த சாப்பாட்டுக்கடைல இட்லி 5 ரூபாதான்
அட.. ஆச்சரியமாக இருக்குதே?
இதென்ன ஆச்சரியம்? இட்லி அளவு
கூட 5. ரூபா மாதிரிதான் இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைமண்ணில் ஒரு பயணம்

ரஹுமான்

**வீட்டுக்கு** வீடு வாசல்படிதான். உலகின் எந்த ஒரு மூலையில் பார்த்தாலும் குழப்பங்களும் சச்சரவுகளும் நிறைந்திருக்கின்றன. தனி மனிதனாகவோ அல்லது கூட்டமாகவோ, இயக்கமாகவோ அல்லது இனங்களாகவோ மோதுகிறார்கள். உரிமை, மொழி, மதம், இனம், இடம் என்ற வகையில் உலகில் எத்தனையோ போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. போராட்டங்களில் பலவகைகள் இருந்தாலும் எல்லாமே போராட்டங்கள்தான். அகிம்சாவாதிகள் இரத்தம் சிந்தாது ஓர் போர் செய்கிறார்கள், ஆயுததாரிகள் கூட தங்களின் வழி முறையில் போராடித்தான் உலகில் தங்களின் தேவைகள், உரிமைகளை வென்றுள்ளார்கள். மன அமைதி பேசும் மனிதர்களும் கூட ஏதேனும் ஒரு வகையில் தங்களின் மனத்தோடு கூட போராட வேண்டிய நிலைதான் உள்ளது. எறும்புகளைக் கொல்வதும் பெரும் பாவம் என்போரும் யுத்தத்தால் சுதந்திரம் தேடுவதையும், சமாதானப்படை என்னும் போர்ப்படை கொண்டு சமாதானத்தை நாடுவதும் உலகில் பல்கிப்போன ஒன்றாகி விட்டது. மனிதன், போராட்டம் இவை இரண்டும் உடல், அறிவு, மற்றும் ஆத்மா உடன் ஒன்றாகக் கலந்து விட்டதை நாம் காணக் கூடியதாகவே இன்று உள்ளது.

அன்றைய அரேபியாவில் திரும்பும் திசையில் எல்லாம், கோத்திரங்களின் வேறுபாட்டால் பிரிந்துபட்ட பல சமூகங்கள் இருந்தன். மது, மாது, சூதாட்டம் என என்னென்ன தவறுகள் உலகில் இன்று இருக்கிறதோ அத்தனை தவறுகளையும் அங்கே செய்து வந்த சமூகம் அது, பல வகைப்பட்ட தெய்வ வழிபாட்டை பரம்பரை பரம்பரையாக செய்து வந்த மக்கள் இருந்தார்கள். அவர்களிடம் உலகத்திற்கு ஓர் இறைவன் என்றும் அவனது தூதரும் அடியாரும் தாம் என்றும், போதனை செய்த முஹம்மது (ஸல்) அவர்களின் போதனையால் ஏற்பட்ட புரட்சியின் விளைவே, இன்றைய உலகின் பல கோடி முஸ்லிம்கள்.

இவ்வாறான புரட்சி செய்த அந்த மனிதர், ஒரு பெரும் பட்டம் பெற்றவரா அல்லது வேறு ஏதேனும் தகைமைகளோடு இறைத் தூதராகத் தம்மை கூறிக்கொள்ளுமுன் இருந்தவரா என்று வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், வரலாறு அவர் ஒரு படிக்காத, நம்பிக்கைக்குரிய சிறந்த வியாபாரி என்றே சாட்சியம் சொல்கிறது.

இப்படியான அந்த மனிதர் ஒரு மத வெறியரா? என்று பார்த்தால் அதற்கு அவரது வாழ்வில் கூட ஆதாரம் இல்லை. வரலாறு இவ்வாறு இருக்க, அவர் ஏன் யுத்தங்களை முன்னெடுத்தார்? அவை எமக்கு என்னதான் சொல்கின்றன. அவற்றின் நோக்கம் தான் என்ன? அந்த யுத்தத்தில் அவர் கையாண்ட உத்திகள்தான் என்ன? “வாள் எடுத்து வீசுகிறவன் வீரன் அல்ல. தனது கோபத்தை அடக்கி ஆள்பனே வீரன்” என்று போதித்த அவர் வாள் எடுத்ததன் நோக்கம் தான் என்ன?

இருந்த இடத்தில் இருந்து கொண்டே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகனைகளை இயக்கும் இந்த காலத்திலேயே தனது படையை கட்டுப்படுத்தி வழி நடத்துவது கடினமான ஒன்றாக இருப்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது. படிக்காத அந்த மனிதர் எப்படி 1000 பேர் கொண்ட படைகளைக் கூட, தனது 319 பேர் அல்லது அதை விடக் குறைந்த படைகளை கொண்டு வென்றார். இன்னும் பாலைமண்ணின் கொடூர வெயில், கடும் குளிர் என்ற காலச் சூழலில் எவ்வாறு தனது எல்லா போர்களிலும் தனது படைகளை வழி நடத்தி சரித்திரம் படைத்தார் அந்த மாமனிதர் முஹம்மது (ஸல்). இதையெல்லாம் மத மாறுதல்களைக் கடந்து, ஒரு உண்மைவீரனின் கதையாகக் காணக் கூடாதா? வாருங்கள் உண்மைக்கான யுத்தத்தின் களங்களைத் தாண்டலாம்.

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்களுக்கெல்லாம் நினைவை விட்டு நீங்காத ஆண்டு. வரலாறு சொல்லும் பெரும் கதையாடல்களின் கீழ் சின்னஞ் சிறு முக்கியமான நிகழ்வுகளும் மறைந்து கிடக்கின்றன.

*1983ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி காலை நேரம்.*


இந்திய நாட்டின் மத்திய கிழக்குப் பிரதேசக் காடுகளை அண்டிய ஒரு பகுதியில் பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்களும், முன்னூறுக்கும் அதிகமான பொலிஸ்காரர்களும் திரண்டிருக்கிறார்கள். அங்கு ஒரு அலங்காரமான பந்தல் இடப்பட்டிருக்கிறது. ஒரு பொதுக் கூட்ட மேடைக்கான அனைத்து அலங்காரங்களும் கொண்ட பந்தல் அது. ஆச்சார்ய வினோபாவின் படம், மகாத்மா காந்தியின் படம், துர்க்காதேவியின் படம் ஆகியன மண்டபத்தின் ஒரு பகுதியில் மாட்டப் பட்டிருக்கின்றன. பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் பணிப்பின் பேரில் மத்தியப் பிரதேச மாநில முதலமைச்சர் அர்ஜுன் சிங் அந்த நிகழ்வில் கலந்து கொள்ளப் போகின்றார். அத்துடன் அவரைவிட பிரபல்யமான வேறு சிலரும் அந்நிகழ்வில் கலந்து கொள்ளப் போகின்றார்களாம்!! ஒரு அறிவிப்பாளன் அந்நிகழ்வின் முக்கியத்துவம் தரும் பதட்டத்துடன் ஒலிபெருக்கியில் அறிவிப்புக்களைச் செய்து கொண்டிருக்கின்றான். நிகழ்வில் கலந்துகொள்ள இருப்பவர்களின் பெயர்ப் பட்டியலை வாசிக்கின்றான். ஒரு பெயரை வாசித்து மேலும் ஏதோ கூறியதுதான் தாமதம் மக்கள் கூட்டத்தில் இருந்து கேலிச் சிரிப்பொலிகளும் கூக்குரல்களும் எழுந்தன. இரண்டு பொலிஸ்காரர்கள் அவனைப் பிடித்து பலவந்தமாக மேடையில் இருந்து இறக்கி விடுகின்றார்கள். சற்றே ஒதுக்குப்புறமாக ஒரு பாடசாலையில் தற்காலிக முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே உள்ளவர்களில் ஒரு இளவயதுப் பெண் பக்கத்தில் உள்ள ஒரு ஆணிடம் 'ஏனிந்தச் சிரிப்பும் சத்தமும்' என்று கேட்கிறாள். 'இந்த நாட்டின் முதலமைச்சர் உங்கள் முன் சரணடையப் போவதாக அந்த ஆள் அறிவிக்கின்றான்' என்று சிரித்தபடி பதில் சொல்லுகிறான் அவன். அவன் பெயர் மான்சிங்! கேள்வி கேட்ட பெண்ணின் பெயர் பூலான்தேவி! ஆம்! கேட்ட மாத்திரத்திலேயே எல்லாரையும் நடுங்க வைத்த ஒரு பெயர் பூலான்தேவி!!நேரம் உச்சிப் பொழுதாகின்றது. முதலமைச்சர் வந்து விட்டார். அவரிடம் தனது ஸ்டென் துப்பாக்கியையும் ரவை பட்டியையும் நடுங்கும் கரங்களால் கையளித்துச் சரணடைகின்றாள் பூலான்தேவி. பிறகு துர்க்காதேவியின் படத்துக்கும் மாலை அணிவித்து துர்க்காதேவியையும், முதலமைச்சரையும், மக்களையும் கரம் கூப்பி வணங்குகின்றாள். பிறகு ஒவ்வொருவராக மற்றவர்களும்.....

சில ஆண்டுகளின் பின் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய மரியே தெரஸ்கூன், போல் ராம்போலி ஆகிய இரு பிரெஞ்ச் எழுத்தாளர்களிடம், 'நான் துர்க்காதேவியிடம் தான் மானசீகமாகச் சரணடைந்தேன்' என்று கூறியிருக்கிறார் பூலான் தேவி. தனது குறுகிய வாழ்நாள் பூராகவும் வயது,பால்,சாதி, வர்க்க பேதங்களின் பெயரால்



# பூலான்தேவி - 01





# வேப்பமரத்தின் கீழ் ஒரு துர்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையாக ஒடுக்கப்பட்டு வதைக்கப்பட்டவர் பூலான். இந்த ஒடுக்கு முறைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு தன்னை ஒடுக்கியவர்களை கொடுமையாகப் பழிவாங்கினார் அவர். பூ என்னும் பெயருடைய ஒரு துடியாட்டமான சிறுமி கொடும்புயலாக மாறியது ஏன்? ஒரு கொடுமையான பெண்ணாக அவர் மாறியதற்கு பல காரணங்கள் சொல்லப் படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானது ஒரு வேப்பமரம் அந்த வேப்பமரம் சிறுமி பூலானும், அவளது சகோதரியும் தங்களது இரு கரங்களாலும் கட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு பெரிதாக இருந்தது. புண்ணிய பாரதத்தின் புனிதமான ஏழு நதிகளில் ஒன்றான யமுனை ஆற்றங்கரையில் உள்ள ஒரு சிற்றூரில் பூலான் தேவியினுடைய குடும்பத்துக்குச் சொந்தமான ஒரு சிறு துண்டு நிலத்தில் அந்த மரம் வளர்ந்திருந்தது. அந்த மரத்தைக் காப்பாற்றுவதற்காக சிறுமி பூலான் மூர்க்கமாகப் போராடினாள். ஆனாலும் தோற்றுப்போனாள். அன்றிலிருந்து அவளது வாழ்க்கைப் போராட்டம் பெரும் போராகவே மாறிவிட்டது! அவரே கூறுவதுபோல மனித மரியாதையைக் காப்பற்றுவதற்காகவே அவர் போர் புரிந்தாரா? நாங்களும் அறிந்து கொள்ள ஆவலாக 'இருக்கிறம்' இணைந்திருங்கள்....




நன்றி - கோபுலு

# பனையடிப் பக்கம்


## ஒண்டுக்கு

வேலியெல்லாம் வெட்டிப் போட்டான்
வேரோட புடுங்கிப்போட்டான்
தாலி கட்ட வந்த மனுசி
தள்ளிப் படுங்கோப்பா எண்டுட்டாள்
ஊரெல்லாம் பார்க்குது – அட
ஒண்டுக்குப் போக வழியில்லை
தருமர் நாய்க்குக் குடுத்த சாபமல்லோ
நான் உவைக்குக் குடுக்க வேணும்.

## அவர் விடார்

அவங்கள்
மேலாலதான் வந்தவங்கள்
இவங்கள்
கீழயிருந்துதான் சுட்டாங்கள்
ஆனைப் பாரும் எங்கட வீட்டுக்கை குண்டு
கூரையைப் பிய்ச்சுக் கொண்டுதான் வந்தது
உந்தாள் நியூட்டன் தாத்தா
ஒண்டுக்கும் விடார்.

– பனையடிப் பாடகன்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## வானொலிக் கால
# நினைவுகள்

இந்தக்காலகட்டத்தில் நான் நிறையவே மேடைநாடகங்களில் நடிக்கத் தொடங்கி விட்டேன். மறைமுதல்வனின் 'முசுப்பாத்தி-தான்' என்ற நாடகம்தான் நான் கொழும்பில் நடித்த முதலாவது மேடை நாடகம் 1968ல் பெப்ரவரி 13ம் திகதி (திகதியைக் கவனித்துக் கொள்ளுங்கள்)

நடிகர் சிவாஜி கணேசன் பெண் வேசமிட்டு புகழடைந்ததை கேள்விப்பட்டோ என்னவோ தயாரிப்பாளர் ஒரு சிவாஜியை எனது கதாநாயகியாக பெண் வேடத்தில் நடிக்கவைத்தார்.



தற்போது லண்டனில் டாக்டராக இருக்கும் அந்த சிவாஜி, ஒப்பனை-யில் மிக அழகான பெண்ணாகவே காட்சி அளிக்கப் போக, கதாநாயக-னான நான் நிஜமாகவே ரொம்ப வெட்கப்பட்டேன். அப்போது சிந்தாமணி பத்திரிகையில் நாடக விமர்சனம் எழுதிய ஜெயசீலன் என்பவர் ' கதாநாயகன் வெட்கப்-பட்ட அளவிற்கு நடிப்பில் சோபிக்க வில்லை' என்று எழுதினார்.

இருந்தாலும் அக்கால தமிழ் நாடகத்துறையில், அக்கால தமிழ் சினிமாவை போலவே இளம் கதா-நாயகர்களுக்கு பஞ்சம் இருந்தது. இல்லாவிட்டால் நடுத்தர வயதைக் கடந்து விட்ட பல நடிகர்கள் தமிழ் சினிமாவில் அரைக்காற்சட்டை-யுடன், கையில் இரண்டு இரட்டை றூல் கொப்பிகளுடன் சதாகால-மும் கல்லூரி மாணவர்களாகவே தோன்றுவதைப் பார்க்கும் பாக்கியத்தை பெற்றிருப்போமா?

எனவே இந்தப் பற்றாக்குறை-யினால் பல மன்றக் காரர்கள் என்னை நடிக்க வருந்தி அழைத்-தார்கள். ( அழைத்ததின் பின்னர் ஏன் அழைத்தோம் என்று அவர்கள் வருந்தியிருப்பார்கள் என்பது வேறு விடயம்) மாத்தளை கார்திகேசு, எஸ். எஸ் கணேசப்பிள்ளை. எஸ் ராம்தாஸ், கே.கே. மதிவதனன் ஆகியோரின் பல நாடகங்களில் நான் அனேகமாக கதாநாயகனாக அல்லது முக்கிய பாத்திரத்தில் நடித்தேன். 69 - 70 க்கு இடைப்பட்ட காலத்தில் 17 நாடகங்கள் கொழும்பு யாழ்ப்பாணம். தெல்லிப்பளை பளை மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மேடையேறிய இந்த நாடகங்கள் எல்லாம் அனேகமாக சிரிப்பு நாடகங்களே.

இக்காலப்பகுதியில் நான் வானொலிக்கென ஏதாவது எழுத-வேண்டுமென்று நினைத்தேன். நகைச்சுவை மேடை நாடகங்களில் எழுந்தமானமாக, அதாவது சம-யோசிதமாக பேசி நடித்த அனு-பவத்தினால் நகைச்சுவையாக எழு-துவது எனக்கு இலகுவான-தாகப்-பட்டது.

இக்காலத்தில் கொழும்பு - யாழ்ப்பாணம் புகையிரதப் பய-ணமே ஒரு சுவையான அனுபவமாக இருக்கும், தினமும் ஒரு மணிபோல புறப்படும் யாழ்தேவியும் இரவு போகும் தபால் புகையிரதமும், நிரம்பி வழிந்து கொண்டு போகும் - வரும். அதில் இருக்கை பிடிக்கிறத, அதுவும் மூலை இருக்கை (கோணர் சீட்) பிடிக்கிறது தன்னிகரில்லாச் சாதனைமாதிரி கருதப்படும்




ஆசனங்களுக்கு கீழே பேப்பரை விரித்து படுத்துக்கொண்டு போய் கொடிகாமம் இறங்க வேண்டியவர் சுன்னாகத்தில் இறங்கி பஸ் எடுத்து திரும்பி ஊர் வந்து சேரும் புதினங்-களும் நடக்கும். இப்படியான அனு-பவங்களுடன் அடிக்கடி பயணம் செய்யும் ஒரு கற்பனைப் பாத்-திரத்தை உருவாக்கி. அவருக்கு 'சீசன் ரிக்கற் சீனித்தம்பி' என்று பெயரும் வைத்து, அவரைப்பேட்டி காண்-பதாக ஒரு குட்டி நாடகப் பிரதி எழு-தினேன்.

என்னோடு அப்போது வேலை பார்த்துக் கொட்டிருந்தவர்களில் ஒருவரான கலைஞர் ரி. ராஜேஸ்-வரன் பற்றி முன்னரே குறிப்பிட்-டிருந்தேன். சிறந்தொரு மேடை நடிகர். சரித்திர இதிகாச பாத்திரங்-களில் அருமையாக நடிப்பார்.

'அன்னை ரைற்' கே.எஸ்.பாலச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் அவர் கதாநாயகனாக நடித்த ' டாக்சி டிரைவர்' என்ற இலங்கைத் தமிழ்த் திரைப்படம் வெளியாகியிருந்தது. அக்காலத்தில் வானொலி நாடக தயாரிப்பாளராக இருந்தவர் கண்டிப்புக்கு பேர்போன சானா அவர்கள். அவரது நாடகத் தயாரிப்பு முறைபற்றி பின்னர் குறிப்பிடுகிறேன். அவரிடம் பிரதி ஒன்றுக்கு அங்கீகாரம் பெறுவதே சிரமமான காரியம். அதற்கு முதல் அவரிடம் என்னைப் போன்ற மேடை நாடகங்களிலும், வானொலி நாடகங்களிலும நடிப்பவராதலால் ராஜேஸ்வரன் மூலம் இந்தப்பிரதியை சானாவுக்கு அனுப்புவது எனக்கு சரியானதாகப்பட்டது.

நானும் அவரும் வேலையிடத்தில் அருகருகில் மேசைகளில் இருந்தோம். அந்தப்பிரதியை திரும்பத் திரும்ப வெட்டித் திருத்தி எழுதிக் கொண்டிருந்தேன். எதையோ எழுதுவதும், எனக்குள் சிரித்துக் கொள்வதையும் பார்த்த அவர் ' என்ன எழுதுகிறீர்' என்று கேட்கவும், இதற்காகவே காத்திருந்தவன் போல பிரதியை அவரிடம் கொடுத்தேன். அவருக்கு நன்றாகப் பிடித்து விட்டது. அதே வேகத்தில் சானாவிடம் கொடுத்து பலத்த சிபாரிசும் செய்திருக்க வேண்டும்.



சானா அப்போது ' மத்தாப்பு' என்ற கதம்ப நிகழ்ச்சியைத் தயாரித்துக் கொண்டிருந்தார். ஆறாம் இலக்க கலையகத்தில் ஏறக்குறைய 75, 80 பார்வையாளர்களுக்கு முன்னிலையில் ஒவ்வொரு மாதத்திலும் இறுதி ஞாயிற்றுக் கிழமை ஒலிப்பதிவு நடைபெறும். தொலைக்காட்சி வராத காலம் அது. புகழ் பெற்ற வானொலிக்கலைஞர்களை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் இது என்பதால் நேயர்கள் இந்நிகழ்ச்-சிக்கான அனுமதிப்பத்திரத்தை வேண்டிப் பெற்று தவறாமல் வருவார்கள். அந்த நேரத்தில் வானொலி நிலையத்தையும் சுற்றிப்பார்த்துக் கொள்ள அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனந்தி சூர்யப்பிரகாஸ் ( பின்னர் லண்டன் பீபீசியில் குரல் கொடுத்த அவரேதான்) இ. ராஜேஸ்வரி சண்முகம், ராஜம் ராஜன். எஸ். எஸ். கணேசபிள்ளை, கே. மார்க்கண்டன், என். பி. தர்மலிங்கம், பிச்சையப்பா, தாசன் பேர்னாண்டோ முதலான-வர்கள் மேடையில் தோன்றி குட்டி நாடகங்கல நடித்து பார்வையாளர்களை சிரிக்கவைப்பார்கள். பார்வையாளர்களின் சிரிப்பும், கரகோசமும் நிகழ்ச்சியுடன் சேர்ந்து ஒலிப்பதிவாகும். தொடர்ந்து வரும ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் பத்து மணிக்கு ' மத்தாப்பு' ஒலிப்பரப்பாகும் போது நாடு பூராவும் மக்கள் காத்திருந்து கேட்பார்கள்.





அந்த நிகழ்ச்சியில் எனது பிரதி சேர்க்கப்பட இருப்பதாக கடிதம் வந்தது. கூரையில் எட்டித் தட்டும் சந்தோசம் எனக்கு. 1969 ஆகஸ்ட் 27ந் திகதி. என். பி. தர்மலிங்கம் என்ற அனுபவம் வாய்ந்த நடிகர் எனது பிரதியில் நன்றாகவே நடித்தார். பேட்டி கண்டவர் யார் என்று நினைக்கிறீர்கள்? சானாவேதான்.

அதற்குப் பிறகு என் காட்டில் மழைதான். தொடர்ந்து ' மத்தாப்பு' நிகழ்ச்சிகளுக்கு குட்டி நாடகங்களாக எழுதிக் கொண்டிருந்தேன். ஒரு ஒலிப்பதிவுக்கு எட்டு குட்டி நாடகங்கள் சேர்த்துக் கொள்வார்கள். சானா என்னுடைய முதல் நாடகப் பிரதிக்குப் பிறகு என்னுடைய பிரதிகளில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

ஒரு முறை ஒலிப்பதிவுக்கு முதல் நாள் என்னை நாவலவில் உள்ள தன்னுடைய வீட்டிற்கு அழைத்த சானா, அடுத்த நாள் ஒலிப்பதிவுக்கு கிடைத்த பிரதிகள் எதிர்பார்த்த அளவிற்கு நன்றாக இல்லையென்றும் என்னால் உடனடியாக எத்தனை பிரதிகள் எழுத முடியுமென்றாலும் எழுதித் தரும்படியும் கேட்டார். நான் இருந்த பொறளை வீட்டின் மொட்டை மாடியில் (முற்றுப் பெறாமல் இருந்த மேல்பாகத்தில்) ஒரேயொரு பல்பின் வெளிச்சத்தில் கதிரையைப் போட்டு, ஐந்தாவது நாடகத்தை எழுதி முடிக்க, பொழுது விடிய ஆயத்தமாகியிருந்தது. குளித்து விட்டு அப்படியே புறப்பட்டு சானாவிடம் ஐந்து பிரதிகளையும் இலங்கை வானொலியில் வைத்து கொடுத்து விட்டு நித்திரைக் கலக்கத்துடன் வேலைக்குப் போய்ச்சேர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை எல்லாமே ஒலிப்பதிவின் போது, நன்றாக வந்ததில் சானாவிக்கும் எனக்கும் சந்தோசந்தான்.

இந்த நாட்களில் வானொலிக்கு தமிழ் பகுதி நேர அறிவிப்பாளர்களை தேர்வு செய்யப் போவதாக அறிவித்தார்கள். நானும் விண்ணப்பித்தேன். இலங்கை வானொலியில் அப்போது சிறுவர் மலர் காலத்திலிருந்தே நடிக்கத் தொடங்கிய பலர் இருந்தார்கள். வானொலி நிலையத்துடனான நீண்ட நாள் தொடர்பு அவர்களுக்கு அனுகூலமாகவே இருந்தது. வானொலி நிலைய நிர்வாகிகள் மூத்த அறிவிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள் எல்லோருக்கும், அவர்களைத் தெரிந்திருந்தது.

மாமா, மாமி என்று சர்வசாதாரணமாக அவர்களை அழைப்பார்கள். எங்களுக்கு அது சற்று ஆர்சரியமாகக் கூட இருக்கும். நடிகர்களாகவோ, அறிவிப்பாளர்களாகவோ வருவதில் அவர்களுக்கு முன்னுரிமை கிடைத்தது. இதில் தவறு ஒன்றுமில்லை. பின்னாளில் அரசியல் பூச்சுக்களுடன் யார் யாரோவெல்லாமோ அறிவிப்பாளர்களாக வந்தார்கள். அதைவிட இது எவ்வளவோ மேல்.

## நோக்கியா போஃபியா

ஜில் ஜில் ராணியே
என் செல்பில் ஏறுமா –நீ
மிஸ்கோல் போடுவாய்
என் கிஸ் கோல் வேண்டியே –நான்
ஹாய் ஹாய் சொல்லுவேன்
யார் றீலோட் பண்ணுவார்
அரசனாய் ஆண்டவன் –இன்று
ஆண்டியாய் வாழ்கிறேன்.
கேட்கிறேன் நானம்மா –என்
நோக்கியா நோக்குவாய்

–பிறையன்



# சலனம்



த.ஜெயசீலன்

கடலினது மேற்பரப்பாய் அசைகிறது மனம்... ஆனால்
கடலின் அடித்தளமாய்
மௌன மணல் விரிப்பாய்
வெளியே சலனமற்று விறைத்துள்ளது உடல்;
உனது
பார்வை துளித்துளியாய்
படிந்துள்ளது என்மேலே....
மாரியோய்ந்த பின்னும் மரத்திருந்து
விழும் துளிபோல்!
அப்பார்வை என்னை ஆதரிக்கும் பார்வையா?
இல்லை பிணமொன்றை
வாயூறி .... நரிபார்க்கும்
பார்வையினைப் போன்றதுவா?
புரியவில்லை எந்தனுக்கு!
கடலினது மேற்பரப்பாய் அலைகிறது மனம்....ஆனால்
மௌன மணல் விரிப்பாய்
வெளியே சலனமின்றி விறைத்துள்ளது உடல் ...நானும்
அகலிகைபோல் கல்லாகி
அப்படியே கிடக்கின்றேன்.
குட்டிச் சுவரானேன்.
கூண்டில் கிளியானேன்.
பட்ட மரமானேன்.
பால் பசுமை கெட்டேன்...யான்
உயிர் பிழைத்துக் கொள்ள ஒரு வழியும் இல்லையா? என்
உயிரோடு சமாதியாதல் தான்
உனது வேண்டுதலா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதேர் பாஞ்சாலியும் பெரிய மாமியும்

போன கிழமை பல்லின மக்களுக்கான தொலைக்காட்சி ஒண்டில அதிகாலை ஒரு மணிக்கு பிரபல இயக்குனர் சத்யஜித் ரேயின் "பதேர் பாஞ்சாலி" என்ற படம் போடுவதாகச் செய்தி கிடைச்சது.

பொதுவா இந்த தொலைக்காட்சியை இரவு பத்து மணிக்குப் பின்னால பார்ப்பதை அறிஞ்சால் மெல்பனில இருக்கிற என்ர கூட்டாளி தாஸ் கொடுப்புக்குள்ள சிரிப்பான். ஏனெண்டால் பத்து மணிக்கு மேல அவங்கள் போடுற படங்கள் மொழி வித்தியாசமில்லாம வெளிப்படையான பாலியல் காட்சிளை வாரி இறைக்கும். இந்த மாதிரி விசயத்தில பிரெஞ்சு படம் என்றாலும் சீனப் படம் என்றாலும் அவங்கட கொள்கை ஒண்டுதான்.



இருந்தாலும் அத்தி பூத்தாப் போல இப்பிடி "பதேர் பாஞ்சாலி" போலப் படங்களும் வருவதுண்டு. நீண்ட நாளாகத் தமிழ்ப் பலசரக்கு கடையள்ள "மெட்டி ஒலி", "அண்ணாமலை" இத்தியாதி கசற் மலைகளுக்க தேடினாலும் கிடைக்காத இப்படியான படங்களைப் பார்க்க இதுதான் சந்தர்ப்பம் எண்டு, படத்தைப் பதிவு பண்ணி அடுத்த நாள் பார்க்க முடிஞ்சுது. சரி இனிப் படம் எப்பிடி எண்டு பார்ப்பம்.

1955 ஆம் ஆண்டு பதேர் பாஞ்சாலி" வங்காள மொழியில் வந்தது. பாட்டு, சண்டை, குழு நடனம் அல்லது குலுக்கல் டான்ஸ் போன்ற சராசரி இந்திய மசாலாச் சினிமாச் சமையலுக்குத் தேவையான ஒரு ஐட்டமும் இதில் கிடையாது. (அடச்சீ, இவ்வளவும் இல்லாமப் படம் பார்க்ககோணுமோ எண்டு தாஸ் முணுமுணுப்பது போல ஒரு பிரமை) படம் 115 நிமிசம் கறுப்பு வெள்ளையில ஓடுது. பதேர் பாஞ்சாலி என்பதன் தமிழ் விளக்கம் "சின்னஞ் சிறு வீதியின் பாட்டு" (Song of the Little Road) சரி, இனி இப்படத்தின் கதையைச் சொல்லுறன்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலச் சூழலில் ஒரு மிகப் பின் தங்கிய பெங்காலிக்கிராமம். அந்தக் கிராமத்தில் வாழும், ஒரு வாழ்ந்து கெட்ட குடும்பம், குடும்பத்தலைவன் ஹரிகர், அவன் மனைவி சர்பஜயா, மூத்த மகள் துர்கா, இளையவன் அபு, இவர்களின் வறுமை வருமானத்திலும் பங்கு போடும் ஹரிகரின் வயதான சகோதரி. இவர்களின் ஆசைகள், நிராசைகள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள் தான் கதைக் கருவை ஆக்கிரமிக்கிறது.

தன் கணவன் ஹரிகரின் அப்பாவித்தனத்தால், ஏமாற்றப்பட்டு தம் சொத்தை இழக்கும் இயலாமை, ஏமாற்றிய குடும்பம் வைத்திருக்கும் தம் காணியில் மகள் துர்கா கொய்யாப்பழம் திருடுவதும், வீட்டுக்காரி வந்து கூச்சலிடும் போது மகளுக்காகப் பரிந்து பேசுவது, பின் அவள் போனதும் துர்க்காவைத் தண்டிப்பது, கணவன் வந்ததும் தம் இயலாமையை நொந்து கொள்வது என்று சர்பஜா பாத்திரத்தில் வரும் கருணா பனர்ஜி ஒரு சராசரி இந்திய அல்லது ஈழத்துக் குடும்பத்தலைவியை நினைவு படுத்துகிறார். குடும்பத் தலைவன் ஹரிகர் இந்தக் குடும்பத்தை விட்டு அடிக்கடி வேலைதேடி நாட் கணக்கில் அலையும் போது தனித்த ஒருத்தியாக அவள் போராடுவதும் வெகு இயல்பு.

கொய்யாப் பழம் திருடுவது, தாயிடம் எவ்வளவு ஏச்சும், அடியும் வாங்கினாலும் தன் பால்யப் பருவத்துக்கே உரிய ஆசைகளை அடக்க முடியாத துர்க்கா பாத்திரம். திருடிய கொய்யாப்பழத்தை அப்படியே தன் முதிய மாமியாரிடம் (அப்பாவின் சகோதரி) கொடுப்பதும், மாமியார் தன் தாயிடம் சண்டை போட்டுக்கொண்டு வீட்டை விட்டுப் போகும் போது கையில் பிடித்துக் கூட்டி வருவதும், ரயிலைக் காட்டும் படி கேட்ட தன் தம்பியின் கைபிடித்து நெல் வயல் வெளியே கொண்டு காட்டுவது என்று அவளின் பல பரிமாணங்கள் காட்டப்படுகின்றன.



பிபூதி பூஷன் பானர்ஜி இன் மூலக்கதையும், ரவி ஷங்கரின் இசையும் படத்திற்கு மிகப்பலம். செல்வந்தர் வீட்டில் களவான முத்து மாலையைத் துர்கா தான் திருடினாள் என்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழிச்சொல் வரும் போது அவளுக்காக நாமும் பரிந்து பேசத் தோன்றுகிறது. ஆனால் அவள் இறந்த பின்னர் அவள் தம்பி அபு தற்செயலாகக் காணுவதும், பின் யாரும் பார்க்காமல் இருக்க அதை நீரோடையில் வீசுகின்றான். அந்தக் காட்சி காட்டப்படும் போது, முத்து மாலை பொத்தென விழுவதும், சிறிய சலசலப்பின் பின் சலனமற்றுத் தோன்றும் நீரோடை ஒரு அழகான கவிதை.

இந்தப் படத்தைப் பார்த்த போது ஒரு விசயம் சிந்தனைக்கு வந்தது. நல்ல படைப்பாளிகள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் பெரும்பாலும் நடைமுறை வாழ்க்கையின் பரிமாணங்களைச் செயற்கை இல்லாமல் அப்படியே தந்திருக்கிறார்கள். தோல்வி கண்டவர்கள் பலர் மித மிஞ்சிய செயற்கையைக் கொடுத்து அடையாளம் இழந்து போனவர்களாக, தன் படைப்பில் சுயத்தை இழந்தவளாக பவன் தன் முகவரியை இழக்கிறான்.

எல்லாம் இழந்து தனிமரமாக இருக்கும் குடும்பத்தலைவியும், மகன் அபுவும் வேலை தேடி உழைத்த பணத்துடன் வரும் கணவன் வந்ததும் ஊரை விட்டு போக முடிவெடுக்கும் போது தான், ஒதுங்கி இருந்த அயலவர்கள் உதவுவது போல வருகிறார்கள். ஆனாலும் தொடர்ந்து வந்த துன்பச் சறுக்கல்களோடு பெனாரஸ் நகர் நோக்கி புதிய வாழ்க்கை ஒன்றுக்காக அவர்களின் கட்டை வண்டி பயணிக்கின்றது.


விமர்சனத்தின் இறுதிக்கு வருமுன்னர் இன்னொரு பாத்திரத்தையும் பார்ப்போம்.

அது படத்தில் வரும் வயதான கிழவி (துர்க்காவின் தகப்பனின் சகோதரி)




ஊனமான கண்ணுடன், இடுக்குப் பார்வை பார்த்துக்கொண்டே தன் தம்பி வீட்டில் களவெடுத்துத் தின்பதும், தம்பியின் மனைவியின் வசவுகளைக் கேட்டுப் பழிப்புக் காட்டுவதும், கோபித்துக்கொண்டு அவர்களின் வீட்டை விட்டு வெளியேறி இன்னொரு வீட்டில் அடைக்கலம் போகும் போது "கொஞ்ச நாளைக்குத்தான்" என்று இரஞ்சுவதும் மிக இயல்பு. சண்டி பாலா தேவி என்ற முதுபெரும் நடிகை சிறப்பாகவே அதைச் செய்திருக்கிறார்.

தம்பியின் மனைவி துரத்திய போதும், அவர்களுக்குப் பிள்ளை பிறந்த போது தன் வைராக்கியத்தையும், அவமானத்தையும் மூட்டை கட்டி விட்டு எதுவும் நடக்காதது போல், மீண்டும் வந்து குழந்தையை கொஞ்சுவதும், தன் வாழ்வின் இறுதி நிமிடங்களில் நைந்து போன சேலையைப் போல, கேட்பாரற்று காட்டில் இறப்பதும் நம் இதயத்தை ஊசியால் குத்துவது போல .... தமது அந்திம காலத்தில் சொந்தங்களை இறுகப் பற்றி வாழ நினைக்கும் முதுமையும், அவர்களின் அபிலாசைகளைப் புரிந்து கொள்ளாத சமுதாயமும் ஒரு சக்கரம் போல. அதே நிலை இவர்களுக்கு இவர்களின் முதுமையின் விளிம்பில் வருவது தவிர்க்க முடியாத உலக நியதி.



இந்தப் படத்தில் வரும் வறட்டு வைராக்கியம் உள்ள அந்தக் கிழவிப் பாத்திரத்தைப் பார்த்த போது என் பெரிய மாமியின் குணாதிசயம் நினைவுக்கு வந்தது. என்ர அப்பாவின் மூத்த சகோதரியான அவர் நான்கு இளைய சகோதரிகளின் வாழ்வுக்காக அப்புவுடன் சேர்ந்து தன் இளமையில் இருந்தே தோட்ட வேலைகளிலும், வறுமையின் போராட்டத்திலும் பங்கு போட்டவர். தன்ர திருமண வாழ்விலையும் குறுகிய கால அனுபவம் தான் அவவுக்குக் கிடைச்சது. மல்லிகைப் பூ வாசனையை விட அவர் அதிகம் மணந்தது எங்கட தோட்டந்தான். கோடா போட்ட புகையிலையாத் தான் இருக்கும். அவவின்ர வயதில முக்கால் வாசிப் பாகம் ஆச்சியைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போதும், "இனி இஞ்ச ஒருத்தரும் வரத்தேவேல்லை" என்று தொடங்கி வார்த்தைகள் அனல் பறக்கும். தடுக்க வரும் ஆச்சிக்கும் "ஆச்சி நீ சும்மா இரணை" என்று தொடங்கி சரமாரியான சொல் கணைகள் வந்து விழும். என்ர (அவரின் அம்மா) கவனிப்பதிலேயே கழிந்தது. இப்படி தொடர்ச்சியான போராட்டமும், வாழ்வின்ர நெருக்கடிகளும் அவரை ஒரு போர்க்குணம் மிக்க மனுசியாக மாற்றி விட்டது. நான் ஊரில் இருந்த காலத்தில ஆச்சி வீட்டை போக இலேசான பயம் எப்பொழுதும் அடி மனசில இருக்கும். தப்பித் தவறி ஏதாவது என் சிறுவயதுக்கே உரிய குறும்புத்தனங்களைச் செய்தால் அப்பாவுடன் இடைக்கிடை அவருக்கு வரும் கோபதாபங்களிலும் பலிக்கடா நாங்கள் தான். ஆக மொத்தத்தில் என்ர இளமைப் பிராயத்து மன விம்பத்தில் ஒரு பயங்கரமான இடம் அவருக்கு இருந்தது.

காலம் எல்லாவற்றையும் மாற்றி விடுகிறது. ஆச்சியும் போய்விட்டா கொழும்பில் இருந்த 2 வருசங்களையும் புலம் பெயர்வில் 10 வருசங்களையும் தின்று விட்ட காலங்களையும் கடந்து இந்த ஆண்டு ஊருக்குப் போனேன்.



சாவித்திரி என்ன உன் மாமியாரோட நன்மைக்காகத்தான் நீ தனிக் குடித்தனம் போறியா

காயத்திரி ஆமாம்! ஏன்னா அவங்களைப் பார்க்கும் போதெல்லாம் என்னை அறியாமல் எனக்குள் பாக்ஸிங் மூட் ஏற்படுதே.



பெரிய மாமி எப்படி இருப்பா, இப்பவும் அப்படியா? என்று மனதுக்குள்ள நினைச்சுக் கொண்டு ஏஷியா பைக்கை தாவடியை நோக்கி மிதித்தேன்.

ஆச்சி வீட்டுப் படலையைத் திறந்தேன். "என்ர அப்பு வந்திட்டானோ" என்று ஒரு குரல் கேட்டது. எட்டிப் பார்த்தேன். காலம் கொடுத்த பரிசான வில் போன்ற கூன் முதுகுடன் என் பெரிய மாமியேதான். அவரின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்து வரவா என்று கேட்பது போல இருந்தது. என்ர கன்னத்தைத் தடவி ஒரு குழந்தையைப் போல அழகு பார்த்தார். என்னை அந்த மண் திண்ணையில் இருத்தி, தளர்ந்த அவரின் நரம்பு விழுந்த கை என் கையை இறுகப் பிடித்துக்கொண்டது. என்ர வெளிநாட்டுப் புதினங்களை கேட்கும் பாவனையில் தன் பாவனையை ஏற்படுத்திக் கொண்டார். என் உள் மனதுக்குத் தெரியும் அவர் என்னுடைய புதினங்களை கேட்பதை விட என் அருகாமை தான் அவருக்குத் தேவைப்பட்டது. "போட்டு வாறன் பெரிய மாமி" என்ற போது "ஓமப்பு, நல்லா மேனை" என்று அவரின் உதடும் "போகாதை" என்பது போல அவரின் மனம் சொல்வதைக் கண்ணும் வெளிப்படுத்தியது.

முதுமை எவ்வளவு விசித்திரமானது, எட்டாத சொந்தங்களையும், விலகிப் போன பந்தங்களையும், தேடி அது ஒடுக்கின்றது. கிடைக்காத பட்சத்தில் கழிந்து போன வாழ்வியலின் நினைவுகளை அசை போட்டு எஞ்சிய அந்திம காலத்தை அது கழிக்கின்றது. வாழ்க்கைப் பயணம் என்பது ஒரு பதேர் பாஞ்சாலி, அதாவது எங்கட எண்ணங்கள் போட்ட சின்னஞ்சிறு பாதையில் வரும் பாட்டு அது.



நீ ஒரு ஆம்பிளை சிங்கத்தை பெத்து வச்சிருக்கேன்னு சொன்னியே எங்க ..காணோம்.

சர்க்கஸ்க்கு வேலைக்கு போகுது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பழம்

**எனக்கு** வாழைப்பழம் என்றால் நேற்று வரைக்கும் நன்றாகவே பிடித்திருந்தது. என்னுடைய வாழ்க்கைக்கும் வாழைப்பழத்துக்கும் அப்படி ஒரு நெருக்கம். எனக்கு இப்பொழுதும் நன்றாகவே நினைவு இருக்கிறது. சின்ன வயதில் எனக்கு கொஞ்சம் திக்குவாய். அன்று அரிவரி படிப்பித்த வாத்தியாரம்மா இனியில்லை என்று கஷ்ரப்பட்டுதான் எனக்கு 'ல'\'ள' ......வித்தியாசங்களை எல்லாம் சொல்லித் தந்தவர். அவர் படிப்பிக்கும் போது கரும்பலகையில் வாழைப்பழம் ஒன்றை வரைந்து மஞ்சள் நிறத்தால் வண்ணம் தீட்டி "வாழைப்பழம்" என்று உச்சரிக்கப் பழக்கினார். நான் பிழையாகத் தான் அதைச் சொல்லுவேன். அதனால் வகுப்பில் எனக்குக் கொஞ்ச காலம் "வாழைப்பழம்" என்று பட்டம் வைத்துக் கூப்பிட்டார்கள், வாத்தியாரம்மாவின் விடா முயற்சியால் ஒரு நாள் "வாழைப்பழம்" என்று அழகாகச் சொல்லி விட்டேன். அவருக்குப் பெரிய சந்தோசம். எனக்கும்தான். அதற்கு முன்னர் நான் வாழைப்பழத்தை பல இடங்களில் பல தடவைகள் கண்டிருந்தாலும், அன்றிலிருந்து தான் எனக்கு வாழைப்பழத்தில் தனிப்பிரியமும் ஈர்ப்பும் வந்தது. நான் அம்மாவுடனும் அப்பாவுடனும் வெளியில் செல்லும் வேளைகளில் எங்காவது வாழைப்பழத்தைக் கண்டால் மழலை மொழியில் "வாழைப்பழம்" என்று சொல்லிக் காட்டுவேன். அம்மாவும் அப்பாவும் மழலையைக் கேட்டு என்னைக் கெட்டிக்காரன் என்று பாராட்டி மாறி மாறி முத்தம் தந்து செல்லம் பொழிவார்கள்.

அம்மா வாரத்தில் மூன்று நாள் என்றாலும் காலை உணவாக



கீதாவாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய்ப் பூ போட்ட பிட்டுடன் வாழைப்பழத்தை குழைத்துப் பிசைந்து ஒவ்வொரு பிடியாய் ஊட்டி விடுவார். அதை "மணி" ருசி என்பதற்கு அப்பால் அமுதம் என்று கூட வர்ணிக்கலாம். நான் அடம் பிடிக்காமல் நல்ல பிள்ளை மாதிரிச் சாப்பிட வேண்டும் என்றால், வீட்டில் ஒரு வாழைப்பழம் என்றாலும் கட்டாயம் இருக்க வேண்டும் என்று அம்மாவுக்கு நன்றாகவே தெரியும்.

எனக்கு கடவுள் என்ற ஒன்றின் மீது முதலில் பயபக்தியை ஏற்படுத்தியதும் அந்தச் சின்ன வயது வாழைப்பழம்தான்.


அம்மா வாழைப்பழச் சீப்பை கடையில் வாங்கி பக்குவமாக தண்ணீரில் கழுவிச் சுத்தம் செய்து எங்கள் ஊரிலுள்ள சிவன் கோவிலுக்கு கொண்டு செல்வது வழக்-கம். நான் அம்மா வாழைப்பழச் சீப்பை வீட்டிலிருந்து கோவிலுக்கு கொண்டு சென்று நிவேதனமாக படைப்பதற்கு முன்னதாகவே தட்டில் இருக்கிற வாழைப்பழச் சீப்பிலிருந்து ஒரு பழத்தை என்றாலும் எடுத்து சாப்பிட ஒவ்வொரு முறையும் முயல்வேன். அம்மா "கடவுள் கோபிப்பார்" என்று சொல்லி தட்டை வீட்டில் எங்காவது உயரத்தில் வைத்து விடுவார். எட்டாத பழம் புளிக்கும் என்று விட முடியாது தானே? நான் ஒரு நாள் அம்மா கோவிலுக்கு கொண்டு செல்வதற்காக எடுத்து வைத்திருந்த சீப்பிலிருந்து வாழைப்பழம் ஒன்றை களவாக எடுத்து ஒளித்து வைத்து சாப்பிட்டேன். மறுநாள் எனக்குச் சுரம் வந்து விட்டது. எனக்கு ஏற்பட்ட அந்த நோய் சாமிக் குற்றம் தான் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன் அதற்காக வாழைப்பழத்துக்கு நன்றியும் சொன்னேன். அதற்கு பின்னர் கோவில் பிரசாதமாகவோ, பஞ்சாமிர்தமாகவோ வாழைப்பழம் என் கைகளில் வெள்ளிக்கிழமைகளில் இருக்கும்.

பாவம்,புண்ணியம் என்று சொல்கிறார்களே. அதில் எனக்குச் சின்ன வயதில் நம்பிக்கையைத் தந்ததும் சாட்சாத் வாழைப்பழம் தான். எங்களுடைய பெரிய வாத்தியார் ஒருகதை சொல்லுவார்.

ஒரு ஊரில் ஒரு மோசமான கிழவி.. அவர் கஞ்சத் தனமானவர்... ஒரு நாள் ஆரோ ஒரு பிச்சைக்காரன் வந்து தர்மம் கேட்க, அழுகின வாழைப்பழம் ஒன்றை தர்மம் செய்திருக்கிறார்... மிச்ச சொச்சம் எல்லாம் 'பாவம்" என்ற கணக்கில் ..எமதர்மராஜன் கிழவியை நரகத்தில் உள்ள தீக்கிடங்கு ஒன்றுக்குள் இறக்கி விடுமாறு ஏவலாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கிறான்... கிழவி தீக்கிடங்குக்குள் இறக்கப்படுகிறார். தீயின் வெம்மையை போல வேறு கொடுமை உண்டோ. கிழவி அணு அணுவாக சித்திரவதை அனுபவித்துக் கொண்டு இருக்க... ஆகா.. அற்புதம்... எங்கிருந்தோ அந்த அழுகிய வாழைப்பழம் பறந்து வந்து கிழவியின் கைக்கு மேலாக நின்றது. அவர் என்ன நினைத்தாரோ தெரியாது... அதை எட்டிப் பிடிக்கிறார்.. அழுகின வாழைப்பழம் பறக்கத் தொடங்குகிறது. கிழவியையும் இழுத்துக் கொண்டு. கிழவி நரக வேதனையிலிருந்து தப்பினார். நான் ஆறாம் வகுப்பில் அறிந்து கொண்ட கதை. நானும் பலதடவைகள் வாழைப்பழத்தின் மேல் அமர்ந்திருந்து உலகெங்கும் பறந்து திரிவது போல கனவு கண்டிருக்கிறேன்.

ஒரு நாள் நான் சாப்பிடும் பொழுது மீன் முள்ளை தவறுதலாக விழுங்கி விட்டேன்.அது தொண்டைக்குள்ளோ, வயிற்றுக்குள்ளோ, குடலுக்குள்ளோ சென்று எங்கேயோ சிக்கியிருக்க வேண்டும். ரண வேதனை. அம்மாவும் அப்பாவும் இரவு நேரத்தில் எங்கு போவார்கள்? அம்மா ஊர்ப் பரியாரிப் பாட்டிக்கு தகவல் சொல்லி அனுப்பினார். வந்து பார்த்த பரியாரிப் பாட்டி வாழைப்பழம் ஒன்றை எடுத்துத் தோலை உரித்து, தன் கண்களை மூடி ஏதோ முணுமுணுத்து விட்டு என்னிடம் வாழைப்பழத்தைக் கடிக்காமல் அப்படியே விழுங்குமாறு தந்தார். நான் அவர் சொன்னபடி செய்தேன். என்ன அதிசயம்... வாழைப்பழம் முள்ளைத் தள்ளிக் கொண்டு ஒரு அரை மணித்தியாலத்திற்குள் வரவேண்டிய பாதையால் வந்தே விட்டது.

இதற்குப் பின்னர் எனது க.பொ.த உயர்தர பரீட்சைக்காகத் தமிழை ஒரு பாடமாகப் படித்த போது அங்கும் வாழைப்பழ மயம் தான். முக்கனிகளில் ஒன்றாக... தோல் இருக்க சுளை பிடுங்கி என்ற அடுக்கு மொழியாக.. வாழைப்பழத்தை உரித்து வாயில் கொடுப்பது போல.. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது என்பதான உவமைகளாக.. ஏழைகளின் ஆப்பிள் வாழைப்பழம் என்ற பழமொழி-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக. கன்னிப்பழம் என்பதன் ஒத்த சொல்லாக எத்தனையோ விதமாக வாழைப்பழம் எனது தமிழ்ப் பாடத்துடன் ஒன்றித்துப் போனது.

நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் பதவிக்கு போட்டியிட்டுத் தேர்தலில் நின்றேன். எனது சின்னம் என்னவென்று நினைக்கிறீர்கள். வாழைப்பழம் தான் தேர்தலில் அமோக வெற்றி.

இனி என் திருமண வாழ்க்கைக்கு வருவோம். எனக்கு இரு பிள்ளைகள். அவர்கள்இரட்டைச் சகோதரர்கள். ஒட்டிப் பிறந்தவர்கள், அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்துத் தான் எடுத்தது. அவர்களை அன்பாக ஒட்டிப் பிறந்த இரணை வாழைப்பழங்கள் என்று தான் கூப்பிடுவேன். ஆனால் இன்று....

நான் எனது நண்பன் ஒருவனுடன் திருமண வீடொன்றுக்கு செல்ல நேர்ந்தது. நண்பன் மாப்பிள்ளை - பொம்பிளை வீட்டுக்காரர்களை பற்றி காதோடு காதாக எளிய சாதிக்காரர்கள் என்று எனக்குச் சொன்னான். நான் சாதி பார்க்கும் சாதியில்லை என்று அவனுக்கு எந்தவித சந்தேகமும் இல்லாமலே தெரியும். நான் கலியாண வீட்டு வாசலுக்கு வந்த உடனேயே அங்கே நாட்டப்பட்டிருந்த வாழை மரங்களின் பழக்குலைகளில் இருந்து இரண்டு மூன்று பழங்களை ஆரும் காணாமல் பிடுங்கி எடுத்து பையினுள் போட்டுக் கொண்டேன். உள்ளே சென்றோம். அங்கே எங்களுக்குத் தட்டுகளில் பலகாரங்களும் வாழைப்பழமும் பரிமாறப்பட்டன.

நான் நினைத்தேன் நண்பன் அந்த வீட்டில் ஒன்றுமே சாப்பிட மாட்டான் என்று. ஆனால் அவன் வெகு சாதாரணமாக வாழைப்பழத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். நான் அவனை வியப்புடனும் பெருமையுடனும் பார்த்தேன். நான் பார்ப்பதை அவதானித்த அவன் 'மச்சான் இது அவர்கள் வீட்டில செய்தது இல்லை. கடையில் வாங்கியது தானே" என்றான்.

எனக்கு வாழைப்பழம் முதன் முதலாகக் கசக்கத் தொடங்கியது.

எங்க பெரியப்பாவுக்கு கோபம் வந்த பக்கத்தில் உள்ளவன் தலையில் கொட்டுவார்

ஏன் அப்படி செய்யார்?

கோபத்தை யார்கிட்டவாது

'கொட்டித் தீர்க்கிறது அவரோட பழக்கம்.





# அழுத்தம்

குறும் படம் மீதான கண்ணோட்டம்.

வாணி

**இலங்கையில்** தயாரிக்கப்பட்ட அழுத்தம் குறுந்திரைப்படம் சர்வதேச விருதைப் பெற்றி இருக்கிறது. இதனை இலங்கை தமிழ் சினிமா வரலாற்றின் புதிய மைல் கல் என்று சொல்வது மிகையல்ல. சர்வதேச Bonjur விருது பெற்ற இக் குறுந் திரைப்படத்தை ஸ்கிரிப்நெட் நிறுவனம் தயாரித்தது. நிறுவனத்தின் இளம் இயக்குனர் ஞானதாஸ் இதனை எழுதி இயக்கினார். இலங்கையில் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப் படம் ஒன்று சர்வதேச விருதைப் பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இது இலங்கை தமிழ் சினிமாவின் போக்கில் ஆரோக்கியமான மாற்றத்தை தோற்றுவித்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தம் குறும்படம் யாழ்ப்பாண போர்க்கால குழுவின் யதார்த்தத்தை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. அதாவது போர்க்கால யாழ்ப்பாணத்தின் மூலம் இலங்கையின் பாரப்பரிய - மரபு வழி கல்வி முறைமையை அழகாக படம் பிடித்துக் காட்டியுள்ளார் இயக்குநர் காசிநாதர் ஞானதாஸ்

> திரைப்படத்தில் குறியீடுகள் மிகவும் முக்கியமானவை. அதுவும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு அவை அவசியமானவை. இக்குறும்படத்தில் செக்கு இழுக்கும் மாடு அழுத்தத்தின் குறியீடாக காட்டப் படுகிறது

போர்க் கால யாழ்ப்பாண சூழலின் கைதியாக ஒரு சிறு பையன் - வயது 12. யாழ்பாண பாரம்பரிய - மரபு வழி கல்வி முறைமையின் கைதியாக ஒரு தந்தை. இந்த இரு பாத்திரங்களுக்கும் இடையிலான உளவியல் போராட்டமே 'அழுத்தம்' குறும் படத்தின் கதையாகும். உண்மையில் எமது போர்க்கால யாழ்ப்பாணத்தில் இப்படியான மகன்மாரையும் தந்தைமாரையும் நிஜத்தில் எம்மால் காண முடிகின்றது.



> இயக்குநர் கதையை விட அழகியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்

தந்தையானவர் தனது மகன் படிப்பால் உயர்ந்து ஒரு டாக்டராகவோ பொறியியலாளராகவோ, சட்டத்தரணியாகவோ எதிர்காலத்தில் வர வேண்டுமென படுகறாராக உள்ளார். மகனோ படிப்பில் கவனத்தை செலுத்தாமல் வித்தியாசமாக சிந்திப்பவனாகவும், ஒரு பரிசோதனையாளனாகவும் உள்ளான். அவன் சைக்கிளை சுற்ற வைத்து டைனமோவை இயக்குவதன் மூலம் பெறப்படும் மின்சாரத்தில் வானொலியை கேட்பதற்கு முயற்சிக்கிறான். இயக்குநர் ஞானதாஸ் சிறுவன் கதாபாத்திரத்தை பேசாத ஒருபாத்திரமாக மாற்றியிருப்பது, கதைக்கு மேலும் அழுத்தத்தை சேர்த்துள்ளது.

தகப்பன், மகனின் நடவடிக்கையில் சந்தோசப் படுபவராகவோ திருப்தி அடைபவராகவோ இல்லை, அவர் மகனின் எதிர்காலம் குறித்து பெரிதும் கவலைப்படுகிறார். அவர்கள் வாழும் பிரதேசத்தில் விமானம் பறந்து திரிந்து குண்டு போடுகிறது, பங்கருக்குள் பாதுகாப்பு கருதி அவர்கள் ஒளித்திருக்கிறார்கள். அந்த நேரத்திலும் எங்கேயடா புத்தகம்? எடுத்துக் கொண்டந்து படி என்று தனது மகனை வெளியில் கலைத்து புத்தகத்தை எடுத்து வர தகப்பன் சொல்வாரா? என்கிற கேள்வியை தவிர்க்க முடியாமல் கேட்க வேண்டி உள்ளது. தந்தையாக நடித்தவரின் நடிப்பின் போதாமையையும் சற்று உணர முடிகின்றமை மற்றொரு விடயம். ஒரு திரைக்கதையானது வலுவான ஒரேயொரு கருத்தை மாத்திரம் இரசிகர்களுக்கு கொண்டு செல்-வதாக இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இட-மில்லை . ஆனால் இக்குறும்படத்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் குவிக்கப் பட்டிருப்பது போல தெரிகிறது. அழுத்தம் இலங்கையின் கல்வி முறையை கண்டிக்கிறதா? அல்லது தகப்பன் - பிள்ளை உறவு முறையில் மாற்றத்தைகாண விளைகிறதா? அல்லது யாழ்ப்பாணத்தின் குடும்பத் தலைவர்களின் மனோபாவம் மாற வேண்டும் என்று சொல்கிறதா? அல்லது பிள்ளைகளை அவர்களின் போக்கில் விட வேண்டும் என்று கற்பிக்கிறதா? இளம் சமூகம் புத்தகப் பூச்சியாக இருப்பதை விட கண்டு பிடிப்பாளராகவோ, விஞ்ஞானியாகவோ வர வேண்டும் என்கிறதா என்பதான பல சந்தேகங்களை இயக்குனரிடம் கேட்க வேண்டியுள்ளது. சந்தேகம் ஏற்படாத வகையில் இயக்குநர் கதைக்கு மேலும் வலுச் சேர்த்திருக்க வேண்டும் என்று படுகிறது.

திரைப்படத்தில் குறியீடுகள் மிகவும் முக்கியமானவை. அதுவும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு அவை அவசியமானவை. இக்குறும்படத்தில் செக்கு இழுக்கும் மாடு அழுத்தத்தின் குறியீடாக காட்டப்படுகிறது. கதையின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை கவனத்தை ஈர்க்கும் பல இயக்க உத்திகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆயினும் இயக்குநர் கதையை விட அழகியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்பதான விமர்சனத்துக்கும் இடம் உண்டு.

தந்தை மகன் பாத்திரங்களை தவிர மேலும் இரு பாத்திரங்களையும் இயக்குநர் நடமாட விட்டிருக்கிறார் குறைந்தளவிலான பாத்திர வார்ப்புகள் கதைப் போக்கில் தேவையற்ற இடியப்ப சிக்கலை ஏற்படுத்தவில்லை. மனிதர்களை விட மாடு திரைக்களத்தின் பெரும் பகுதியை விழுங்கி விட்டது. ஒளிப்பதிவு மற்றும் ஒலிப்பதிவு இலங்கை தமிழ் சினிமாக்களோடு ஒப்பிடுகிற போது மோசமானதல்ல என்றே படுகிறது. ஆயினும் சர்வதேச மட்டத்தில் அவை மேலும் பட்டை தீட்டப் பட்டிருக்க வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் அழுத்தம் குறும்படத்தின் வரவும் அதற்கு கிடைக்கப் பெற்ற விருதும் இலங்கைத் தமிழ் சினிமாவுக்கு விடி வெள்ளியாகும்.

அந்த டொக்டர் ஏன் மருந்து சீட்டுல மஞ்சள் தடவி கொடுக்கிறார்?

குழந்தைக்கு காது குத்துறதுக்கு மருந்து எழுதிக் கொடுக்கிறார்





# ஹைதராபாத்தில் இருந்து ரென்னிஸ் புயல்

அண்மையில் வெளியிடப்பட்ட புதிய உலக ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் முப்பதோராவது இடத்தில் இருந்த சானியா மிர்சா ஒரு இடம் முன்னேறி முப்பதாவது இடத்திற்கு வந்துள்ளார். ரென்னிஸ் உலகின் இந்திய நம்பிக்கை நட்சத்திரம் இவர். இருபது வயதைத் தாண்டாத சானியா உலகத் தரவரிசையில் முதல் முறையாக முப்பதாவது இடத்தை இம்முறை பிடித்துள்ளார். சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில், சானியா கடைசியாகப் பங்கேற்ற மூன்று ரென்னிஸ்த் தொடர்களிலும் காலிறுதி அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் முன்னேறியுள்ளார். சானியா முப்பதாவது இடத்தை பிடித்திருப்பது இதுவே முதல் முறை. இந்த ஆண்டின் ஆரம்ப உலக தர வரிசையில் அறுபத்தாறாவது இடத்தில் இருந்த சானியா தற்போது முப்பதாவது இடத்திற்கு முன்னேறியிருப்பது இந்தியர்களுக்கு மட்டுமன்றி ஆசிய ரென்னிஸ் ரசிகர்களுக்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணி இருக்கிறது. இலங்கையிலும் ஒன்றும் குறைவில்லை, முன்னேறித்தான் இருக்கிறோம் ஆனால் ஆட்டம் ரென்னிஸ் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வேண்டாத சுயம்

கே. ஏ. அப்பாஸ்

தமிழ் ஆங்கில மொழிவழி — அஸ்வதி.

**நான்** சிரிக்கிறேன் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிய வேண்டும்? மரணத்தின் இறுதி விளிம்பில் இருக்கும் ஒரு மனிதனால் எப்படிச் சிரிக்க முடியும் என்பது உங்களுக்குத் தெரிய வேண்டும். அப்படித்தானே?


கவலைப்படாதீர்கள் டொக்டர், உங்களுடைய மருந்துச்சாலைக்கு நீங்கள் சென்று மருந்துகளை விற்பது நல்லது. என்னை மரணத்திலிருந்து நீங்கள் காப்பாற்ற முடியாது. யாராலும் முடியாது. காரணம் எனது உடம்பில் ஒன்றல்ல இரண்டு காயங்கள். ஒன்று முதுகுப் பகுதியில், இரண்டாவது அடிவயிற்றில். எனது குடல் வெளியே தொங்குவது தெரியவில்லையா?

நான் ஏன் சிரிக்கிறேன் என்பதை அறிய நீங்கள் காத்திருக்கிறீர்கள். ஒரு மனிதன் மிக இறுதித் தறுவாயில் அவன் சிரிக்க அப்படி என்ன இருக்கும்? அது எதுவாயிருக்கும்? என நீங்கள் ஆச்சர்யப்படுகிறீர்கள்.

நான் உங்களுக்குச் சொல்வேன். நான் யாரென்பது இப்போதுதான் நினைவுக்கு வந்தது. அதுதான் காரணம். நீ என்ன சொல்கிறாய் சகோதரனே. சிரிப்பதற்கு இதில் என்ன இருக்கிறதென்றா? முழுக் கதையையும் பின்புதான் நீ அறிவாய் இறக்கும் தறுவாயில் கூட நான் ஏன் சிரிக்கிறேன் என்று. இரண்டு மாதங்களாக நான் யார் என்பதை அறிய முற்படுகிறேன். பலாத்காரமாக முடி மழிக்கப்பட்ட அல்லது சுன்னத்துச் செய்யப்பட்ட முஸ்லிமா? இந்துவா? சீக்கியனா? ஒரு பிராமணனா? அல்லது தீண்டத்தகாதவனா? லாகூர் வாசியா? அமிர்த சரஸ்வாசியா? எனது சாதி, மதம் பெயரை அடையாளப்படுத்த நான் மட்டுமல்ல வேறு பலரும் முயற்சித்தனர். இந்த மர்மத்தை யாராலும் விடுவிக்க முடியவில்லை. மிகுந்த பிரயத்தனப்பட்டுச் சிந்தித்து என்னாற்கூட முடியாமலிருந்தது. ஆனால் என்னைப் பற்றிய ஞாபகம் எனக்குத் திடீரென ஏற்பட்டு விட்டது... அதுவும் எனது மரணத் தறுவாயில், அப்படிக் கவலையுடன் நோக்காதீர்கள். டொக்டர் என்னைச் சிரிக்க வையுங்கள். உங்களுடைய கவலை உதவி செய்யாது. என்னை நம்புங்கள் டொக்டர். நீங்கள் ஏன் குழம்பியிருக்கிறீர்கள் என எனக்குத் தெரியும். எனது இரண்டு வெட்டுக் காயங்களில் எதற்கு முதலில் சிகிச்சை அளிப்பது என நீங்கள் குழம்பிப் போயுள்ளீர்கள். என்னை மல்லாக்காகப் படுக்க வைத்து எனது குடல் போன்ற உறுப்புக்களைத் திரும்பவும் சரியான இடங்களில் பொருத்தி ஒரு இழை போட முன்பாக முதுகுப் புறத்தில் அமைந்துள்ள காயத்தினால் இரத்தம் பெருக்கெடுத்து நான் இறந்து விடுவேன். மறுபக்கம் திருப்பிப் போட்டு விட்டு முதுகுப் புறத்துக் காயத்திற்குச் சிகிச்சையளித்தால் வயிற்றுப்புற காயத்தினூடாக ஈரலும் சிறுநீரகமும் வெளியே வந்து விடும். கவலைப்படாதீர்கள் எனது கதையை கேளுங்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு சில நாட்கள் “கோமா” நிலையிலிருந்து சுய உணர்வுக்குத் திரும்பும் போதுதான் தெரிகிறது. நான் நியூ டெல்லியில் ஒரு வைத்திய சாலையில் இருப்பது. “உனது பெயர்?” டொக்டர் கேட்டார். நான் மூடியிருந்த எனது மனத்தை எவ்வளவோ கடினப்பட்டுத் திறக்க முயன்றேன் ஆனால் முடியவில்லை.

“மன்னிக்கவும் எனக்கு ஞாபகமில்லை” என்று மட்டும் சொல்ல முடிந்தது. “ இந்துவா, முஸ்லிமா?” டொக்டர் சிக்கலான இன்னொரு கேள்வியைக் கேட்டார். அதனையும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் ஞாபகப்படுத்த முடியவில்லை என்றே அவருக்குச் சொல்ல வேண்டியிருந்தது.

எனது இறந்த காலம், மதம், சாதி, குடும்பம் எதனையும் என்னால் நினைவுக்குக் கொண்டுவர முடியாதிருந்தது. நான் திருமணமானவனா இல்லையா? என்பதனை மறந்திருந்தேன். எனது வயது கூடத் தெரியாது. கண்ணாடியில் என்னைப் பார்க்கும் வரை என்னை ஒரு இளைஞன் என நினைத்திருந்தேன். சுருக்கங்களும் உரோமமும் நிறைந்து எனக்கு அந்நியமாயிருந்தது. அந்த முகத்தை நான் பார்த்ததேயில்லை.

நியூ டெல்லியிலிருந்த டொக்டர்கள் என்னைச் சுய நினைவுக்குக் கொண்டுவர எவ்வளவோ பிரயத்தனப்பட்டனர். எனது சுயத்தை அறியாது நான் இறக்கக் கூடாது என நான் மிகவும் கஸ்டப்பட்டு முயற்சித்தேன். காயப்பட்ட சில அகதிகளோடு பஞ்சாப்பிலிருந்து நானும் கொர்ண்டு வரப்பட்டேன். அவர்களில் பலர் இறந்து விட்டனர் என்பதனை விசாரணைகளின் போது அறிந்து கொண்டேன். அவர்கள் இந்துக்களா, முஸ்லிம்களா, சீக்கியர்களா என்று கேட்டதற்கு மூன்று மதங்களையும் சேர்ந்தவர்கள் எனப் பதிலளிக்கப்பட்டது. அமிர்தசரசிற்கும் லாகூருக்கும் இடையில் அகதிகளை ஏற்றிச் சென்ற இரண்டு ரயில்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தாக்கப்பட்டன. ஒன்று மேற்குப் பஞ்சாப்பிலிருந்து அமிர்த சரசிற்கு இந்து அகதிகளை ஏற்றி வந்தது. மற்றையது கிழக்குப் பஞ்சாபிலிருந்து லாகூருக்கு முஸ்லிம் அகதிகளை ஏற்றி வந்தது. இரவு பதினொரு மணிபோல பாலமொன்றை ரயில் கடக்கும் போது குண்டு வெடித்தது. எஞ்சின் தண்டவாளத்தை விட்டு இறங்கி உலர்ந்து போன சேற்றினுள் சென்று நின்றது. எஞ்சினுடன் சென்ற சில பெட்டிகளில் இருந்தவர்கள் கொல்லப்பட்டும் பெருங் காயத்திற்கும் உள்ளானார்கள். அதே நேரம் பின்பகுதியில் பூட்டப்பட்ட பெட்டிகளில் இருந்தவர்கள் தப்பிக்க முயற்சித்த போது அவர்கள் மீது காட்டுப் பகுதியில் இருந்த கொள்ளைக்காரர்களால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. காயப்பட்ட அகதிகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள இருட்டினுள் ஓடினார்கள்.



அடுத்த நாள் காலை ரோந்து வந்த இந்திய பாகிஸ்தானிய துருப்புகள் தமது எல்லையில் பலர் இறந்தும் காயப்பட்டும் கிடக்கக் கண்டார்கள். அவர்களில் இந்து யார்? முஸ்லிம் யார்? எனக் கண்டுபிடிப்பது மிகச் சிரமமாயிருந்தது. இரத்தம் தோய்ந்த சல்வாருடனும் மேலங்கியுடனும் மயக்கமுற்ற நிலையில் கால்கள் பாகிஸ்தான் எல்லையிலும், உடல் இந்திய எல்லையிலுமாக நான் விழுந்து கிடந்தாக, என்னை அம்புலன்சுக்குத் தூக்கிச் சென்றவன் சொன்னான். புதிதாகப் போடப்பட்ட எல்லை பிரித்துச் சென்ற வயல் இரத்தச் சகதியாகக் காணப்பட்டதாம். அடையாளம் காணமுடியாதவாறு தரம் பிரிக்க முடியாதவாறு ஒன்று சேர்த்து இந்து முஸ்லிம் சீக்கியர்களின் இரத்தம் அந்த நிலத்திற்கு உரம் சேர்த்தது.

வெள்ளைத் தாடியுடைய மௌலானா அவர்களே! என்னை அப்படி உற்றுப் பார்க்காதீர்கள். உங்கள் மனதிலிருப்பது என்னவென்று எனக்குத் தெரியும். மரணத்தின் இறுதிக் கட்டத்திலிருக்கும் மனிதன் எல்லாவற்றையும் அறிந்து கொள்வான் என்பதை மறந்து விடாதீர்கள். நான் ஒரு முஸ்லிம் என்று சொன்னால் என்னைப் புதைப்பதற்கு வேண்டிய ஆயத்தங்களை உங்களுடைய "அஞ்ஜுமான் குதுாம் உல்முஸ்லீமின்" அங்கத்தின் சார்பாக நீங்கள் செய்ய வேண்டுமென விரும்புகிறீர்கள்.

மழிக்கப்பட்ட தலையில் சிறிதளவு குடுமி வைத்திருக்கும் இந்து புரோகிதரே! என்னால் உங்களுடைய நினைவுகளையும் புரிந்து கொள்ள முடிகிறது. என்னை நான்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இந்து என்று சொன்னால் என்னை எரியூட்டுவதற்கு வேண்டிய ஆயுத்தங்களை உங்களுடைய "ஹிந்து தரம் சேவக் சங்" சார்பாக செய்ய வேண்டுமென நீங்கள் காத்திருக்கிறீர்கள். நான் கேள்விப்பட்டேன் இந்த பம்பாய் நகரத்தில் பார்சி இன மக்கள் பிசாசுக் கழுகுகள் பிணத்திற்காகக் காத்துக் கொண்டிருப்பது போல இறக்கப் போகும் ஒரு மனிதனின் முன்னால் நீங்கள் காவல் இருக்கிறீர்கள்.

நான் எனது கதையை மீண்டும் தொடருகிறேன். ஏனென்றால் எனக்குக் கதைப்பதற்கு அதிக அவகாசம் இல்லை. எனது காயங்கள் அவ்வளவு பாரதூரமானவை அல்ல. இரண்டொரு வாரங்களில் குணப்படுத்தி விடலாம். ஆனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சி எனது மூளையைப் பாதித்து விட்டதென்று வைத்தியர்கள் சொல்கிறார்கள். அதனால் பெயரைக்கூட நினைவுக்குக் கொண்டுவர முடியாத குழப்பக்காரனாகி விட்டேன். எனது படங்கள் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் வெளிவரும் சகல பத்திரிகைகளிலும் பிரசுரமாகி உள்ளது. எனது உறவினர்கள், நண்பர்கள் அதனைப் பார்த்து என்னை அடையாளம் கண்டு என்னிடம் வருவார்கள் என்ற ஒரு நம்பிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சில வேளைகளில் அவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டும் இருக்கலாம். நான் தனித்துப் போயும் இருக்கலாம்.

இதே வேளை நோய்வாய்ப்பட்ட காயப்பட்ட சில அகதிகள் அந்த வைத்தியசாலையில் அனுமதி பெற்று உள்ளே வந்து கொண்டிருந்தார்கள். இடப்பற்றாக்குறை ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் சிறிய காயங்களையுடைய என்னை வைத்தியசாலையை விட்டு வெளியேறி ஏதாவதொரு அகதி முகாமில் தஞ்சம் புகும்படி வைத்தியர்கள் பணித்தார்கள்.

நான் நகரம் முழுவதும் அலைந்து திரிந்தேன். ஒரு மைதானத்தின் முன்னாலிருந்த பள்ளிவாசலில் ஒரு அகதி முகாம் அமைத்திருந்தார்கள்.

"நான் ஒரு ஆதரவற்றவன். தயவு செய்து எனக்கு இருக்க இடம் தாருங்கள்" என்று அந்த முகாம் பொறுப்பாளரைக் கேட்டேன்.

"நீ இந்துவா? முஸ்லிமா?" என்றார்கள். "என்னால் ஞாபகப்படுத்த முடியவில்லை" என்ற உண்மையைச் சொன்னேன். நான் பொய் சொல்ல வில்லை.

தொடரும்



அதிரடியா ஒரு மெகாத் தொடர் நாடகம் எடுக்கப்போறீங்களாமே என்ன பெயர்?

'இதுவாடா முடியும்'



# தினமும் மென்பானம் அருந்துபவரா?



**அது ஆரோக்கிய மென்பானம் என்றாலும் ஆபத்துக் காத்திருக்கிறது.**

**நீங்கள்** மென்பானம் அருந்துபவரா? மென்பானம் என்பதைவிட உங்கள் பேச்சுத் தமிழில் சோடா என்று சொல்லிக் கொள்ளலாம்.

'அதிகம் குடிப்பதில்லை, தினமும் ஒரு போத்தல்தான் குடிப்பன்' என்பதுதான் உங்கள் விடையாக இருந்தாலும், ஆபத்தான நோயை எதிர்காலத்தில் சந்திக்க நீங்கள் காத்திருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். அவதானமாய் இருங்கள்.

ஒவ்வொரு நாளும் ஒரு போத்தல் அல்லது அதற்கு மேலான அளவு சோடா குடிப்பவர்களுக்கு மெற்றபோலிக் சின்ரோம் (*Metabolic syndrome*) வருவதற்கான வாய்ப்புக் காத்திருக்கிறது. இந்த நோய் ஏனையவர்களுக்கு வருவதைவிட சோடாப் பிரியர்களுக்கு 48 சதவிகிதம் அதிகம். (மற்றக் குடியர்களுக்கு என்னென்ன போலிக்குகள் வரும் என்பதை இங்கு விபரிக்க வரவில்லை). சோடாப் பிரியர்களுக்கு ஏற்படக் கூடிய இந்த அபாயம் குறித்து பிரபலமான பிரமிங்ஹாம் (Birmingham) ஆய்வு விளக்கியிருக்கிறது. அது என்ன நாமறியாத மெற்றபோலிக் சின்ரோம் என்பீர்கள்? அதீத எடை, நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், குருதியில் அதிகரித்த கொழுப்பு ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணையும் ஓர் ஆபத்தான நோயே இதுவாகும். இவற்றில் ஏதாவது மூன்று ஒருவருக்கு இருந்தால் அவருக்கு மெற்றபோலிக் சின்ரோம் அதாவது உடற்சேதனக் குறைபாட்டு நோய்களின் தொகுதி இருக்கிறது என்று கூறலாம்.

இந்நோய்களின் தொகுதி இருப்பதால் ஆபத்து என்ன?

இவை இருப்பவர்களுக்கு ஆபத்தான இறுதி நோய்களான பக்கவாதம், மாரடைப்பு, சிறுநீரக வழுவல் ஆகியன வருவதற்கான சாத்தியம் மிக அதிகம் என்பதை பல மருத்துவ ஆய்வுகள் தெளிவாக நிரூபித்துள்ளன. சோடா பற்றிய இந்த பிரமிங்ஹாம் ஆய்வு குறித்து சேர்க்குலேசன் என்ற மருத்துவ இதழ் பேசியிருக்கிறது. பிரமிங்ஹாம் இருதய ஆய்வு என்பது நன்கு திட்டமிடப்பட்டு பாரிய அளவில் நடைமுறைப்படுத்தப்படும் மிகப் பிரபலமான அமெரிக்க ஆய்வாகும். 1948ஆம் ஆண்டு முதல் இன்றுவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று தலைமுறைகளாகத் தொடர்ந்து செய்யப்படும் ஆய்வு இதுவாகும். இந்த ஆய்வு ஆறாயிரம் நபர்களை உள்ளடக்கி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

'முன்னரும் செய்யப்பட்ட பல ஆய்வுகள் மென்பானங்களுக்கும் இருதய நோய்களுக்கும் இடையேயான தொடர்புகளை எடுத்துக் காட்டியுள்ளது. அது எனக்கு நன்றாகத் தெரியும் என்பதால் நான் டயட் சோடாதான் குடிக்கிறேன்' என்பீர்கள்! அதுவும் தவறு. டயட் சோடா என்றாலும்கூட ஆபத்துக் காத்திருக்கிறது என்பதுதான் இந்த ஆய்வின் முக்கிய அம்சமாகிறது. அதாவது வழமையான மென்பானங்கள் மட்டுமன்றி, இனிப்புச் சத்தற்ற ஆனால் இனிப்புச் சுவையைக் கொடுக்கும் ஆரோக்கிய மென்பானங்களும்கூட இதே ஆபத்தைக் கொண்டுவரும் என்பதே இவ்வாய்வின் முக்கிய பகுதி.

அதெப்படி கலோரிப் பெறுமானம் இல்லாதிருக்கும் இனிப்புச் சத்தற்ற டயட் சோடா ஆபத்தை தரும் என்று நீங்கள் சந்தேகிக்கலாம். ஆய்வாளர்களுக்கும் இதற்கான சரியான காரணம் தெரியவில்லை, ஆனாலும் பல விளக்கங்களைக் கொடுக்கிறார்கள். சோடாவை விரும்பிக் குடிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் இயல்பாகவே கொழுப்புள்ள பதார்த்தங்களை அதிகம் உட்கொள்கிறார்கள் என்பது ஒன்று. தவிரவும் உணவில் போதுமான அளவு நார்ப் பொருட்களை அவர்கள் உட்கொள்ளாததோடு உடல் உழைப்பிலும் ஈடுபடுவதில்லை என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம் என்கிறார்கள்.



டயட் சோடா கலோரிப் பெறுமானம் இல்லாவிட்டாலும் கூட இனிப்பாக இருப்பதால் அது மேலும் இனிப்பை உண்ணத் தூண்டுகிறது. அத்துடன் சோடா குடித்தபின் போதிய உணவு உண்ட திருப்தி எவருக்கும் ஏற்படுவதில்லை, அதனால் அடுத்த உணவில் கூடிய அளவை வயிறு கேட்கிறது.அது மட்டுமன்றி சோடாவில் உள்ள பிறவுண் கரமல் என்ற பொருள் அழற்சியைத் தூண்டுவதுடன் திசுக்களையும் சேதமாக்குவதும் காரணமாகலாம் என்ற இன்னொரு விளக்கமும் முன்வைக்கப்படுகிறது. இவை எல்லாம் விளக்கங்களே ஒழிய சரியான முடிவுகள் அல்ல. அவற்றை மிகச் சரியாக தேடி அறிவது விஞ்ஞானிகளின் கடமை. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் நாம் சோடாவைக் குடிப்பதை நிறுத்துவதால் அல்லது குறைப்பதால் ஆபத்தான நோய்களைத் தவிர்க்கமுடியும் என்ற தகவல் போதுமானது. சோடா எதுவானாலும் தவிர்ப்பதே புத்திசாலித்தனமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும் பகை

**கனிவுமதி**

**நெஞ்சு** பட பட என்று அடித்துக் கொண்டாலும் முருகேசுவுக்கு இதத் தவிர வேற வழி தெரியவில்லை. தான் இப்படி நாயாய் அலையிறதுக்குக் காரணமா இருந்த, கதிர்வேலை கொல்வதற்கு இதை விட்டா வேற சந்தர்ப்பம் கிடைக்காது என்பதை நன்கு அறிந்து கொண்ட முருகேசு, தான் கையில் வைத்திருந்த, இனிப்பு பண்டத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

"அண்ணே இந்த இனிப்புல கலந்திருக்கிற விஷத்தைச் சாப்பிட்டா, சாப்பிட்டவங்க பத்து நிமிசத்தில பரலோகம் போயிருவாங்க." என்று இனிப்பைத் தந்த அவனது விசுவாசத்துக்குரிய பணியாள் கூறியது முருகேசுவின் மனதில் ஓடியது. தனது எதிரி கதிர்வேலுவின் வீட்டு வாசலில் வந்து நின்றான். கூப்பிட எவரும் வர வில்லை. ஆனால் அவன் மனதில் கடந்த கால நினைவுகள் கூப்பிடாமலேயே வந்து போயின.

முருகேசுவின் நினைவலைகள் ஐந்து வருடங்கள் பின் நோக்கி பாய்ந்தன. தன் அப்பாவிடம் கணக்குப்பிள்ளையாக வேலை செய்த இந்தக் கதிர்வேலு ஏதோ புதிய வியாபாரம் என்று சொல்லி வெற்றுத்தாளில் கையொப்பங்களை வாங்கி கொண்டது நினைவுக்கு வந்தது. பல வருடங்களாக தன்னிடம் விசுவாசமாக இருந்த கதிர்வேலை நம்பி கையெழுத்திட்டு கொடுத்தார் அவர். அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட கதிர்வேலுவின் தில்லு முல்லுகள் முருகேசின் குடும்பத்தை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்து நிறுத்தின. ஆத்திரம் அடைந்த முருகேசுவின் அண்ணன் போட்ட சண்டைகள், கோவில் திருவிழாவில் நடந்த சச்சரவுகள் எல்லாமே இரு வீட்டையும் நிரந்தர எதிரிகளாக்கின. தனது மனைவியின் நோய்க்கும் மரணத்துக்கும் முருகேசுவின்வின் குடும்பத்துச் சச்சரவுகள்தான் காரணம் என நம்பினான் கதிர்வேலு. தங்கள் குடும்பம் வக்கற்றுப் போனதற்குக் காரணமே கதிர்வேலுதான் என்று மாறாத வஞ்சம் உடையவன் முருகேசு. அப்படிப் பட்ட பகையாளியின் வீட்டு வாசலில் தான் இப்போது அவன் நிற்கிறான்.

'உள்ளே வா முருகேசு. ஏன் வெளிவாசலில் நிற்கிற, இது உன் வீடு மாதிரி." என்று உற்சாகமாக வரவேற்றான் கதிர்வேலு. தன் சொந்த வீட்டுக்கே விருந்தாளி மாதிரி வந்தமர்ந்தான் முருகேசு. "பெரியவங்க செய்த பிழைக்கு நீ என்ன பண்ணுவ. இப்ப நா கூப்பிட்டதற்கான காரணம் என்னன்னா, நாம தெனமும் சண்டை போடுறது சரியில்ல. அண்டை அயலில வேற எப்பவும் நச்சரிப்பு. அவங்கள பகைச்சுக்கிட்டும் எங்களால இருக்க முடியாது. எங்க சண்டையைக் காரணமா வச்சு மூணாம் பேர்வழியெல்லாம் மூக்கை வேற நுழைக்கிறானுங்க. இனிமே சண்டை வேண்டாம். உனக்கிருக்கிறது உன்னோட, எனக்கிருக்கிறது என்னோடன்னு பிரிச்சுக்கலாம், எல்லாத்துக்கும் நான் ஏற்பாடு பண்ணுறேன்" என்றான் கதிர்வேலு. நல்லதுங்க என்றபடி கதிர்வேலு கொடுத்த, பாயசத்தை குடித்து விட்டுத் தான் கொண்டு வந்திருந்த இனிப்புப் பண்டத்தை கதிர்வேலுவிடம் கொடுத்து விட்டு விடைபெற்றான் முருகேசு.

"என்ன அண்ண! வந்தவனக் கூறு போடாம பாயாசத்தை கொடுத்து அனுப்புறீங்க" என்று கதிர்வேலு அருகில் இருந்த தம்பி மாடசாமி ஆத்திரத்தில் கத்தினான். "ஆத்திரப்படாதடா மாடசாமி இது அருவாள் சமாச்சாரம் இல்ல, அறிவுச் சமாச்சாரம்". "என்ன சொல்றீங்க அண்ணன்?" என்று மறுபடியும் கதிர்வேல் முகத்தை புரியாமல் பார்த்தபடி இருந்தான் மாடசாமி. "அவன் குடிச்ச பாயாசத்துல விஷத்தை கலந்துட்டேன் இன்னும் அரை மணி



நேரத்தில பரலோகம் போய்ச் சேர்ந்திடுவான்" என்று சிரித்தபடி சொன்ன கதிர்வேலு, காரியம் முடித்த சந்தோசத்தில் தம்பி மாடசாமியோடு கையிலிருந்த இனிப்பை பகிர்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்சமுள்ள ஆச்சிக்கு



சோக்கெல்லோ சண்முகம்



பட்சமுள்ள ஆச்சி அறிவது.

உன்ரை காயிதம் ஒரு கிழமைக்கு முன்னம் கிடைச்சுது. இப்ப நீ ஒழுங்காய்க் காயிதம் போடுகிற படியால மனதுக்கு நல்ல ஆறுதலாய் இருக்குது. சரியாய்ப் பதினைஞ்சு நாள் எடுக்குது ரொறன்ரோவிலை இருந்து காயிதம் வர. இஞ்சையிருந்து வாற காயிதங்களும் உப்பிடித்தான் ஆடி ஆடி வரும் எண்டு நினைக்கிறன். உள்ளூரில சில இடங்களுக்குப் போட்டா ஆடாம ஒரு இடமாக் கிடக்குது எண்டத ஏன் எழுதுவான். ஆச்சி எங்களின்ர 'பேய்ச் சிவசம்பு' இப்ப ஒரு பத்து நாளைக்கு முந்தி செத்துப் போச்சு. உனக்கு இது பெரும் கவலையாய் இருக்கும் எண்டு நான் நம்புறன். எங்கட ஊரில எல்லாப் பேயளும் சாகுமாப் போல கிடக்கு. பேய் மயிலன் செத்து சில நாளில இவர் பேய்ச் சிவசம்புவும் போட்டார். மனுசன் இவ்வளவு நாளும் இருந்திட்டு பஞ்சமியிலை போய்ச் செத்திருக்கு. நீதான் சொல்லுறனி பஞ்சமியிலை செத்தால் பேயாய் திரிவினம் எண்டு. இப்ப எண்டாலும் சொல்லனை இதிலை உண்மையிருக்கே? அந்தாள்ப் பாவம், நீ வடிச்ச கஞ்சிக்கை புளிஞ்ச தேங்காய்ப் பூவைப் போட்டுக் கலக்கிக் குடுத்துப் போட்டு, ஒரு தூக்கு விறகு கொத்துவிக்கிறனி எல்லேனை. ஆரும் 'அந்தாள் பாவம்' எண்டு சொன்னால், நீ சொல்லுவாய் சிவசம்பு அப்பிடித்தரச் சொல்லி கேட்ட படியாலைதான் நான் அப்பிடிக் கொடுத்தனான் எண்டு. அவர் மோதகம் அவிச்ச தண்ணியை இட்டலிச் சட்டில அடி மண்டி வருமட்டும் குடிப்பார். அவருக்கு நம்பிக்கை கடைசியில மோதகம் வருமெண்டு. பாவமனை சிவசம்பு. ஊரிலை எல்லாருக்கும் செல்லப் பிள்ளை. பேய்ச் சிவசம்பு எண்டு பட்டம் வச்சு, பேயிட்டை வேலை வாங்கிற மாதிரி எல்லாரும் அந்தாளை ஏமாத்தி வேலை வாங்குவினம். இப்ப கடைசியாய் பேயாய்ச் செத்திருக்கு. பேய்க்கெண்டால் பாஸ்போட் தேவையில்லைத்தானே. பேயாய்ச் சிவசம்பு ரொறன்ரோவுக்கும் வரலாம், கவனமனை. உங்க பேய்ச் சிவசம்புவுக்குக் கயிறு விட்ட கனபேர் நிக்கினமெல்லே.

எங்களின்ரை காத்தார்ப் பாட்டாவை ஒரு முறை பேய் இறைப்புக்குக் கூட்டிக் கொண்டு போனது எண்டு நீதானே சொன்னனி. மூண்டு முறை கூப்பிட்டு ஓய்ஞ்சு நாலாவது முறை கூப்பிடேக்கைதான் ஓம் எண்டு சொல்ல வேணுமெண்டு நீதானே சொல்லுறனி.

காத்தார்ப் பாட்டா அவசரப்பட்டு மூண்டாவது தரத்திலயே ஓமெண்டிட்டார். பேய், காத்தார்ப் பாட்டாவையும், பாட்டியையும் கூட்டிக்கொண்டுபோய் வாழைக்கு இறைச்சிருக்கு. பேய் துலாவிலை. பாட்டா பட்டையைப் பிடிச்சு இறைசிருக்கிறார். காத்தார்ப் பாட்டி தண்ணி கட்டினவ. பேயின்ரை துலா மிதிப்புக்கு பாட்டாவாலை இறைக்க முடியேல்லை. தண்ணி எல்லா இடமும் பெருகத் தொடங்கீட்டுது. பாட்டிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசயம் விளங்கிப் போச்சு. மண்வெட்டியை நட்டு வச்சு தோளில இருந்த துண்டை அதில சுத்திப்போட்டு வீட்டுக்கு நழுவி விட்டா. காத்தாரிப் பாட்டாவும் பட்டையை அப்படியே விட்டிட்டு குளறிக் கொண்டு வீட்டை ஓடி வந்து படுத்தவர்தான், மூண்டு நாள் கழிச்சுப் பார்வை பார்த்த பிறகு கண்முழிச்சவர். நீ எனக்குச் சொன்ன கதையை நான் இப்ப உனக்குத் திருப்பிச் சொல்லுறன் பேய்ச் சிவசம்பு சாகிறதுக்கு ஒரு மாதத்துக்கு முந்தி இப்ப உன்ரை கோச்சி எங்கை இருக்கு எண்டு விசாரிச்சவர். அப்புவைச் சிவசம்புவுக்கு காட்டேலாது. அப்பு எதுக்கும் பேசிப் போடுவார். அப்பு நிக்கேக்கை வீட்டை வந்தாலும் அப்புவைக் கடைக்கண்ணாலை பார்த்தபடி சிவசம்பு மெல்ல நழுவி விடுவார். காத்தார் பாட்டாவும் பாட்டியும் நல்ல சனங்கள் . நீ ஒரு நாள் மாவிளக்குப் போட மாவிட்ட புரம் போயிருக்கிறாய் . நான் உன்னைத் தேடிக் குளறிக்கொண்டு பின்னால ஓடி வர நீ ஒழிச்சி போய்ச் சேர்ந்திட்டாய். காத்தாரிப் பாட்டாவும் பாட்டியும் என்னைத் தங்களிண்ட வீட்ட கூட்டிக் கொண்டு போய் மாவிளக்கும் தந்து நீ வந்த பிறகு ஒப்படைச்சவை. எனக்கு அப்ப ஐஞ்சு வயசு இப்பவும் நினைவிலை நிக்குது. காத்தாரிப் பாட்டாவையும் பாட்டியையும் மறக்கேலாதணை. ஊரிலை சனம் காத்தாரிப் பாட்டா இல்லா இடத்திலை 'கள்ளக் காத்தார் எண்டு சொல்லுறது ஏனெண்டு இன்னும் விளங்கேல்லை. காத்தாரிப் பாட்டா முருகேசம்மான் ஒருநாள் எனக்குச் சொன்னார், காத்தாரிப் பாட்டா நல்ல பணக்காறன் எண்டு. அவர் கன்னக்கோல் வச்சு கன காசு சம்பாதிச்சு இருக்கிறாராம். அவர் எத்தினை முறை கன்னக்கோல் வச்சுக் களவெடுத்தாலும் ஒருக்காலும் பிடிபட மாட்டாராம். ஏன் என்டு கேளன், அவரிட்ட இடி விழுந்த கம்பி ஒண்டு கையில இருக்கு. களவுக்குப் போகேக்கை கையில கொண்டு போவார். இடி விழுந்த நேரம் இவற்ற தோட்டத்து இதர வாழை மரத்தில அது விழுந்திருக்கு. காத்தாரிப் பாட்டா தன்ர தோட்டத்து ஆட்டுக்குடிலுக்குள்ள நிண்டு அதைப் பார்த்திருக்கிறார். ஓடிப்போய் வாழையை வெட்டி அந்த இடிக்கட்டியை எடுத்திருக்கிறார். இண்டைக்குவரைக்கும் அதுதான் அவருக்குக் கைகொடுக்குது. பிறகுதான் பாட்டா கல்வீடு கட்டினவர். அதாலதான் கல்வீட்டுக் காத்தார் எண்டு அவரைத் தெரிஞ்சவை கூப்பிடுறவை. காத்தார் மட்டுமே எங்கட முருகேசம்மானும் பேரெடுத்தவர்.

சும்மா லேசுப்பட்டவரில்லை முருகேசம்மான்! விவசாய மன்னன் எண்டெல்லே ஊரில சொல்லுறவையணை.

அவற்ர தோட்டத்து மரவள்ளி, புடலங்காய் எல்லாம் விவசாயக் கண்காட்சியில பரிசு பெற்றதெல்லாம் உனக்கு நினைவிருக்கும். மரவள்ளிக் கிழங்கையும் புடலங்காயையும் நேரா நிப்பாட்ட அது அவற்ர தலைக்கு மேலை நிக்கும், அதாலதான் அவருக்குப் பரிசு கிடச்சதெண்டு சொல்லுவினம்.இது அவற்ர தோட்டத்து மரவள்ளிக் கிழங்கின்ரயும், புடலங்காயின்ரயும் உயரத்தைவிட அவற்ர உயரக் குறைவைத்தான் காட்டுது. ஊரில படு கட்டையானவர் அவர்தான். அதாலதான் ஊரார் அவரை"கட்டை முருகேசர்" எண்டு பட்டம் சொல்லிக் கூப்பிடுறவை.

எங்களின்ர ஆக்கள் பட்டம் வைக்கிறதில படு கெட்டிகாரர். எல்லாருக்கும் பட்டம் இருக்கும். உன்ர பட்டத்தை நான் எழுதியே தெரியோணும்.ஊரார் தாங்கள் பட்டம் வச்சவையைக் காணேக்க ஒரு பேர், காணாட்டாப் பட்டப் பேரிலதான் பேசுவினம். உன்னை இப்ப 'ஹொறண்டோ ஆச்சி' எண்டு கூப்பிடுகினம். ஆச்சி எண்டு சொன்னாலே சில பேருக்கு இப்ப கோபம் வருகிது. உனக்கு வராது எண்டது எனக்குத் தெரியும். இஞ்ச பஸ் கொண்டக்ரர்மாற்ற கூத்து தனிக் கூத்து. அதுகள் நல்லா வயசு போன சில பேரைக் கண்டாலும் மிஸ் எண்டுதான் கூப்பிடுங்கள். இளம் பிள்ளையளை 'அன்ரி' முன்னுக்குப் போங்கோ எண்டுவங்கள். விவஸ்தை கெட்டதுகள்தான் இப்ப பஸ்வழிய திரியுதுகள் எண்டு ஊருக்கு போன நேரத்தில பாத்தன். உன்னை உங்க மிஸ் எண்டு சனம் சொல்லுதோ இல்லாட்டி அன்ரி எண்டு சொல்லுதோ எண்டு எனக்குத் தெரியேல்லை. இஞ்ச என்னைப் பலமாதிரியும் சொல்லுதுகள், எல்லாம் பிறகு எழுதிறன்.

இப்படிக்கு உன்ர பட்சமுள்ள,

சண்ணுவத்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பைத்தியக்காரர்கள்

தெரியாத தேசங்களை தேடி அறியும் கடலோடிகள் பயணப்பட தயாரானார்கள். புதிய தேசங்களையும் மக்களையும் அறியும் ஆர்வம் அவர்கள் முகங்களில் தெரிந்தது. தேசங்கள் தேடும் அந்த கப்பலில் மூவர் கொண்ட மற்றுமொரு குழுவும் இணைந்து கொண்டது. தாம் காணப் போகும் புதிய தேச மக்களுக்கு இறைவனை வழிபடும் முறையை சொல்ல இவர்கள் இணைந்திருக்கிறார்கள். கடவுளைக் கும்பிடுவதை விட எப்படிக் கும்பிடுவது என்பதே முக்கியமானது என்பது இவர்களின் கொள்கை. இவர்களை இணைத்துக் கொள்வதில் தேசாந்திரிகளுக்கு அதிக ஆர்வமில்லை. ஆனாலும் செல்வாக்கு மிக்க இந்த மதத் தலைவர்களை அவர்களால் புறந்தள்ளவும் முடியவில்லை.

கப்பல் புதிய புதிய தேசங்களையெல்லாம் பார்த்து வந்தது. எல்லா இடத்திலும் மதப் போதகர்கள் தமது எண்ணப்படி கடவுளை வழிபடும் முறையை விளக்கி வந்தார்கள். மற்றுமொரு புதிய இடத்தில் கப்பல் இப்போது தரித்திருந்தது. தேசங்களைக் காண வந்தவர்கள் தமது ஆர்வங்களை ஆசையோடு பூர்த்தி செய்தார்கள். மதப் போதகர்களும் தமது வேதங்களையும் வழிபாட்டு முறைகளையும் அத்தேச மக்களுக்கு விளக்கி வந்தனர்.



கப்பல் மீண்டும் புறப்படும் நேரம், ஒரு போதகரின் கண்ணில் கடல் நடுவே இருந்த தீவு ஒன்று தெரிந்தது. அங்கு போக போதகர்கள் ஆசை பட்டார்கள். ஆனால் அவர்களுக்கு விடை தர வந்திருந்த அத்தேச மக்கள் 'ஐயோ அங்கு போக வேண்டாம், அங்கு யாரும் கிடையாது. மூன்று பைத்தியகாரர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள்.' என்றார்கள். சரி கப்பல் வேண்டாம் தனிப் படகில் அங்கு போய் வருகின்றோம் என்று போதகர்கள் புறப்பட்டார்கள். தீவில் இருந்த மூவரையும் சந்தித்தனர். என்ன மந்திரம் சொல்லி வழி பட வேண்டும் என்று பகல் முழுவதும் சொல்லி கொடுத்தார்கள். மாலையில் தமது கப்பலுக்குத் திரும்பினார்கள். கப்பல் மீண்டும் புறப்பட்டது. கடலில் இரவு நேரத்தில் பயணப்பட்ட கப்பல் திடீரென நிறுத்தப்பட்டது. மாலுமி பயந்த முகத்தோடு போதகர்களை நோக்கி ஓடி வந்தார். மூன்று பேர் கடலின் மீது நடந்து வந்து கப்பலை நிறுத்தி விட்டார்கள் என பதட்டத்தோடு கூறினார். போதகர்களும் ஆச்சரியத்தோடு கடலை எட்டி பார்த்தார்கள். தீவில் சந்தித்த அதே மூன்று பைத்தியக்காரர்கள் கடலின் மீது நின்று கொண்டிருந்தார்கள். போதகர்களைக் கண்டதும் 'வணக்கம் போதகர்களே நீங்கள் சொன்ன மந்திரத்தை மறந்து விட்டோம் மீண்டும் சொல்வீர்களா? என்று பணிவோடு கேட்டுப் பதில் கிடைத்ததும் கடல் மீதே தமது தீவை நோக்கி நடந்தார்கள். அதற்குப் பிறகு வழிபடுவது எப்படி என்று கூறப் போதகர்கள் எந்த நாட்டிலும் இறங்கவில்லை. அவர்களுக்கு வழிபடுதலுக்கும் இறைவனுக்கும் இடையேயான புரிதல் இருந்த காரணத்தால்.......





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்மா

வழமைபோல வேலைக்குப் புறப்பட்ட தனது கணவனை வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தாள் கமலா . 'இல்லத்தரசி' என்ற தமிழ் வார்த்தைக்கு ஒருவகை இலக்கணமாக இருப்பவள் அவள். ஒரு குழந்தையைப்போல தனது கணவனை நேசிப்பவள். அவர்களின் குடும்பத்தின் வசதி வாய்ப்பிற்கு ஆயிரம் வேலையாட்களை வைத்திருக்க முடியும். ஆனாலும் கமலாவுக்கு அத்தகைய எதிலுமே விருப்பம் கிடையாது. வேலைத் துணைக்கு யாரையாவது வைத்துக் கொள் என்று நித்தமும் சொல்லும் கணவனின் வார்த்தைள் மட்டும் அவளிடம் செல்லுபடியாவதில்லை. கணவனை வேலைக்கு அனுப்பிய கையோடு அன்று துவைக்க வேண்டிய துணிகளை எடுக்க ஆரம்பித்தாள். அந்தவேளை தொலைபேசி சிணுங்கியது. அலுவலகம் போய்ச் சேர்ந்ததும் தொலைபேசியில் ஓரழைப்புக் கொடுப்பது கணவனின் வழக்கம். நிச்சயமாக அந்த அழைப்பாக இது இருக்காது என்பது கமலாவுக்குத் தெரியும். சற்று முன்னர் புறப்பட்ட அவர் அலுவலகத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்க மாட்டார். யாரின் அழைப்பாக இருக்கலாம் என்ற எண்ணத்தோடு தொலைபேசியைக் கையில் எடுத்த கமலாவின் வீறிட்ட அலறல் அடுத்த சில நிமிடங்களாக வீட்டை உலுக்கியது. என்ன நடந்தது என்பதையே அறிய முடியாத மாமியாரின் முகம் மௌன நிறத்தில் உறைந்து கிடந்தது.மாமியாரிடம் எதுவும் கூறாமல் தெருவின் முனை வரை ஓடினாள். அங்கு இரத்தம் தோய்ந்த நிலையில் கணவனின் உடல். சற்று முன்னர் நடந்த விபத்து அவனை இரத்தத்தில் நீராட்டி பரலோகத்திற்கு பயணம் அனுப்பியிருந்தது. கமலா சுயநினைவு இழந்து வீதியில் சுருண்டு விழுந்தாள். அவன் இனி இல்லை என்பதை அவளால் தாங்க முடியவில்லை. நாட்கள் கடந்தன, அவள் இப்போதும் அணியும் வெள்ளை ஆடை கமலாவை விதவை என்று உலகுக்கு அறிவித்தது. அவளின் மனதில் என்றும் அவனின் நினைவுகளே வட்டமிட்டன. இரத்தத்தில் மிதந்த தன் கணவனின் ரத்தச் சிவப்பாகிப் போன அந்த வெள்ளை நிறச் சட்டையை பாதுகாப்பாக வைத்திருந்தாள். "வேண்டாம் அந்த சட்டையைத் தூக்கிப் போடு. இல்லாட்டி அவன் ஆத்மா உன்னைப் பின்தொடரும்..." என்று ஒருவகைப் பயமுறுத்தலோடு கூறிய மாமியாரின் வார்த்தைகளை அவள் இன்றுவரை வரை ஏற்றுக்கொண்டதே கிடையாது. மன ஆறுதலுக்காக ஊருக்குத் திரும்பிய போதும் அந்தச் சட்டையையும் எடுத்துச் செல்ல அவள் மறக்கவில்லை.

அன்று ஒரு சனிக்கிழமை. மாலை ஆறுமணி, துணிகள் துவைக்கப் புறப்பட்டாள். மகிழ்ச்சியாய் வாழ்ந்த தன் சின்ன வயதில் தான் நீராடிக் களித்த ஊர்க் குளக்கரைக்கு நடந்தாள்.

இப்போதெல்லாம் வீட்டில் அவளை அவள் போக்குக்கே விட்டிருந்தார்கள். யாரும் அவளைத் தடுக்கவில்லை. அந்தத் துணி மூட்டையில் கணவனது ரத்ததம் தோய்ந்த சட்டையும் இருந்தது. குளக்கரையில் அவள் அந்தச் சட்டையை எடுத்து நீரில் அலச ஆரம்பித்த போது எதிர்பாராத வகையில் இடி மின்னல் தோன்றியது. மேகங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென இருண்டன. கணவனின் நினைவோடு இருந்த அவள் எதையும் கவனத்திற் கொள்ளவில்லை. சவர்க்காரத்தை எடுத்துச் சட்டையில் தேய்த்து கழுவ ஆரம்பித்தாள், ஒரு முறை. இரு முறை... பல முறை... இல்லை அந்த இரத்தக் கரை போகவே இல்லை. மீண்டும் மீண்டும் முயற்சித்துக் கொண்டிருந்த அவளை திடீரென்று வானத்தில் கண்களை இருட்டாக்கும்படி வந்த மின்னல் திடுக்கிட வைத்தது. வெளிச்சம் பூமியை பிளந்ததுபோல இருந்தது. பெரும் சத்தத்துடன்! எழுந்த சூறாவளிக் காற்று சாந்தமான அந்த நீர்தடாகத்தை பதம் பார்த்-து. நீரலைகள் கொப்பளித்தன!! ஆ....ஆ... ஒரு வெள்ளை உருவம் மெதுவாக மேலெழுகிறது!!!! அந்த வெள்ளை உருவம் மெல்ல அவளை நெருங்கி வருகிறது!!!. இந்தக் கடும் காற்றிலும் அவளுக்குப் பயத்தால் வியர்த்தது. ஆமாம் அது அவள் கணவனின் ஆத்மாதான். உருவம் அவள் அருகில் வந்து நின்றது. பிறகு காகிதத்தில் பொதிந்த ஏதோ ஒன்றை அவளுக்கு நீட்டியது. அவள் அதை வாங்கினாள். அது என்னவாய் இருக்கும் என்று அவள் பார்த்த நேரத்தில் அந்த உருவம் மறைந்தது. ஓர் அசரீரி வானெங்கும் ஒலித்தது.

ஆச்சரியம் அதிசயம் வந்துவிட்டது!!!

புதிய வெண்கமல சோப்!!

ஒரு அலசலில் அழுக்கை அகற்றும்!!!

பளிச்சிடும் வெண்மைக்கு பயன்படுத்துங்கள்

வெண்கமல சோப்!!! ண்கமல சோப்!! கமல சோப்!!! சோப்!!!!


இருக்கிறம்
காத்திருப்பு 1
இருக்கை 3
ஒரு பொல்லாப்பும் இல்லை.
ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்
இளையதம்பி தயானந்தா
நிர்வாக ஆசிரியர்
மனோ ராஜசிங்கம்
ஆசிரியர் குழு
எஸ் ரஞ்சகுமார்
சாந்தி சச்சிதானந்தம்
அப்துர் ரஹ்மான்
வ சிவஜோதி

தலைமை ஓவியர் மதி புஷ்பா
வடிவமைப்பு க மயூரன், கே முஜீன்
கணிணித் தட்டச்சு கா புவனலோஜினி


தொடர்பு
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukkiram@gmail.com


கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.
இதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பைக் காக்க அமெரிக்காவில் ஒரு கல்யாண வீடு



## ·அன்பால் கட்டுப்பட்ட அப்பாக்களும் மகள் மார்களும்!

அப்படியே கிறிஸ்தவ கல்யாணங்கள் போலவே நடக்கின்றன. பெண் மணமகளாக தரை பரவும் வெள்ளை உடையில் ஒரு ரோல்ஸ் ரொய்ஸ் காரிலிருந்து இறங்குகிறாள். கோட்சூட் டுடன் மிடுக்காக அவளைக் கைப் பற்றி அழைத்து வருகிறார் தகப்பனார். திருமணத்துக்காக அலங்கரிக்கப்பட்ட கேக்கும் அங்கே காத்திருக்கிறது. ஆனால் அங்கு மாப்பிள்ளையை மட்டும் காண முடியவில்லை .ஏனென்றால் இது நவீன காலத்துக் கன்னிச்சடங்கு.



ஒரு ஆண்மகனைக் கல்யாணம் செய்யும் வரைக்கும் தங்கள் கன்னித் தன்மை கழியாமல் இருப்போம் என்று தங்கள் தகப்பனாரின் முன்பு சபதம் எடுக்கவே பெண்கள் இப்படிக் கல்யாணக் கோலம் பூணுகின்றனர். இது எல்லாம் இங்கல்ல அமெரிக்காவில்தான் நடக்கிறது .

இந்தக் கன்னிச் சடங்குகளில் மகள்மார் மட்டுமல்ல கதா நாயகிகளின் தகப்பன்மார்களும் நாயகர்கள்தான். தங்கள் மகள்மாரின் கன்னித்தன்மையைக் காப்பாற்றுவதற்கு ஒரு பொறுப்புள்ள தந்தையாகத் தாம் இருப்பதாகப் பதிலுக்கு அப்பாமார்களும் வாக்குக் கொடுக்கிறார்கள். இந்தக் கடமையைச் செய்வதற்காகத் தான் களங்கமில்லாத பாலியல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து அவர்களுடைய தாய்க்கு விசுவாசமாக இருப்பதாகவும் அவர்கள் இங்கு சத்தியம் செய்து கொடுக்கிறாகள்.


**சாந்தி அனுஷா**

அப்பாக்கள் தங்கள் ஆசை மகள்மாக்களுக்கு தாங்கள் பகிர்ந்து கொண்ட வாக்குறுதிகளின் நினைவாக மோதிரம், கையணிகள் போன்ற நகைகளை அணிவிக்கிறார்கள். அப்பாக்கள் தந்த இந்த அணிகளை அந்தப் பெண்கள் தஙகளுடைய திருமண முதலிரவன்று தங்கள் கணவன்மார்களிடம் ஒப்படைக்க வேண்டுமாம். நடனங்களும், கேளிக்கை விருந்துகளுமாக இந்தச் சடங்குகள் முடிகின்றன.

'பியோரிட்டி போல்' என்றழைக்கப்படும் இந்தக் கன்னிச் சடங்குகள் மிஷனரி கிறிஸ்தவ சபைகளின் மூலம் 1998ம் ஆண்டு முதல் பிரபலமாக்கப்பட்டு வருகின்றன. 2006ம் ஆண்டில் 1,400 சடங்குகள் அமெரிக்கா முழுவதும் நிகழ்த்தப்பட்டன. 2007ம் ஆண்டு இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காகலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.' இது ஒரு கொண்டாட்டம் மட்டும் அல்ல. இது கடவுளின் வழியில் வாழும் ஒரு வாழ்க்கைமுறை, அந்த வாழ்க்கை முறையைத்தான் நாங்கள் கொண்டாடுகிறோம், கடைப்பிடிக்கிறோம்" என்று இதில் பங்குபற்றுகின்ற குடும்பங்கள் தெரிவிக்கின்றனவாம். அப்பாக்-களுக்கும் அவர்களுடைய மகள்மார்-களுக்கும் இடையில் ஒரு விசேடமான உறவு இருக்கிறது. அந்த உறவைப் புதுப்பிப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் நாங்கள் கண்டு பிடித்த வழி முறை இது என்று இதனை ஆரம்பித்த கொலராடோவைச் சேர்ந்த ஜெனரேஷன்ஸ் ஒப் லைட் என்கின்ற கிறிஸ்தவ நிறுவனத்தின் தலைவர் ராண்டி வில்ஸன் கூறுகிறார்.

1998ம் ஆண்டு ஆரம்பித்த இந்த வழக்கம் இன்று காட்டுத்தீ போலப் பரவுவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதுதான் புஷ் நிர்வாகத்தின் கிறிஸ்தவ ஒழுக்கக் கட்டுப்பாடுகள் கொண்ட குடும்பம் என்கின்ற கொள்கையும், அந்தக் கொள்கையை பரப்ப அது வாரி இறைக்கும் பல இலட்ச டொலர்களுமாகும். இந்த வருடம் அமெரிக்கப் பாடசாலைகளில் பாலியல் உறவுகளில் ஈடுபடாமலிருப்பதற்கான தவிர்த்தற் கல்விக்காக 206 மில்லியன் டொலர்களை அரசாங்கம் செலவிடுகிறது.

டீன் ஏஜ்பருவத்தினர் மத்தியில் பாலியல் உறவுகள் மலிந்து போயிருக்கும் பிரச்சினை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் உண்டுதான்.

அதனைத் தீர்ப்பதற்கான ஒரு வழிமுறையாக இதனைப் பார்க்கலாம். என்றாலும்கூட, இதற்குப் பின்னாலும் வேறொரு அரசியல் உண்டு என்றே தோன்றுகிறது. உதாரணமாக கன்னிச் சடங்குகள் பெண்களுக்கு மட்டுந்தானா? ஆண் பிள்ளைகளுக்கு இல்லையா? பெண்கள் மட்டும் கன்னிகளாக இருக்க வாக்குறுதி எடுத்துவிட்டு ஆண்கள் எடுக்காவிட்டால் பெண்களைக் கன்னி காக்க அவர்கள் விடுவார்களா?

அப்படிப் பார்த்தால் இது திரும்பவும் ஒழுக்கக் கட்டுப்பாடு என்கின்ற போர்வையில் பெண்களைக் கட்டிப் போடும் நடவடிக்கையோ என்று யோசிக்கத் தூண்டுகின்றது. புஷ் நிர்வாகத்தின் கொள்கைகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று சாதகமாவும் பொருத்தமாகவும்தான் வந்து சேர்ந்திருக்கின்றன. தங்களுடைய ஆயுத பலத்துடன் கூடிய ஏகாதிபத்திய ஆட்சியை நிலைநாட்டுவதும், கறுப்பருக்கெதிரான பாரபட்சங்களைக் கைக்கொள்ளுவதும். கிறிஸ்தவ விழுமியங்கள் என்று கூறிக்கொண்டு கருக்கலைப்பை எதிர்ப்பதும். பெண்கள் கன்னிகளாக இருக்க வேண்டுவதான எல்லாமே ஒரே பிற்போக்குவாதக் கொள்கையின் பல முகங்களாகும். ஒரு கொள்கையும் ஒரு பரிமாணத்தில் மட்டும் இயங்குவது கிடையாது. அது அரசியல், சமூகம், கலாசாரம் என்று சகல பரிமாணங்களிலும் தனது தலையை ஓட்டுகிறது.

இந்தக் கன்னிச் சடங்குகளைப் பற்றிய கவலைக்கிடமான பல தகவல்களை கொலம்பியர் போன்ற பல்கலைகக்கழகத்து ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். கன்னிச் சடங்குகளில் கலந்து கொள்ளும் பெண்களில் 88 வீதமானோர் கடைசியில் தங்கள் கல்யாணத்துக்கு முன்பான பாலியல் உறவுகளில் ஈடுபடுகின்றனராம். இதைப் பற்றிய குற்ற உணர்வுகள் அந்த இள நெஞ்சங்களில் ஆழப் பதிந்திருப்பதனால், அவசரமான, இரகசியமான, பாதுகாப்பற்ற உறவுகளில் ஈடுப்படுபவர்களும் இவர்களே என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். கருத்தரிப்பு, பாலியல் நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டாலும் அதை மறைத்து வைக்க எத்தனிப்பவர்களும் இவர்களாகத்தான் இருப்பார்கள் என்கின்றன ஆய்வுகள். கண்டபடி பாலியல் உறவுகளில் ஈடுபட வேண்டாம் என்று சொல்வது சரி, ஆனால் அதே சமயத்தில் பாதுகாப்பான பாலுறவு கொள்வது எப்படி என்ற அறிவும் பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துகின்றனர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக்கு சுந்தரம்!

கே.கோவிந்தராஜ்

கண்டியிலிருந்து அலவத்து கொட வழியாக அங்கும்புற செல்லும் மூன்று மணி பஸ்ஸில் ஏறி மூலையில் அமர்ந்து கொண்டேன்.

பஸ் புறப்பட்டு திரும்புகையில் தோளில் ரேவலிங் பேக்கும், வாயில் சிகரட்டுமாக பஸ்ஸை நிறுத்தி ஏறிக் கொண்டான் சுந்தரம்!

சுந்தரமும் நானும் ஒரே தோட்டம்தான்! ஒரே லயம்தான்! அடுத்தடுத்த காம்பறாதான்!

அவன் கொழும்பில் ஆரியபவானில் சர்வராக வேலை செய்வது என்னைத் தவிர தோட்டத்தில் வேறுயாருக்கும் தெரிய ஞாயமில்லை!

கந்தோர் ஒன்றில் பணி-யாற்றும் நான், அநேகமாக வாரத்தில் இரண்டு நாட்களாவது அந்த சைவக்கடையில் சுந்தரத்தைக் கண்டு குசலம் விசாரித்துக் கொள்வதுண்டு!

"அண்ணே...... நா சைவக்கடையில வேல செய்யிறேன்னு தோட்டத்துல யாருக்கிட்டேயும் சொல்லிறாதீங்க...." என்பான்!

அப்படிச் சொல்வதனால் எனக்குப் பெரிய நன்மை ஒன்றும் ஏற்படுவதில்லை. நான் எதைப்பற்றியும் வாயே திறப்பதில்லை, என்பது சுந்தரத்துக்கும் தெரியும்!

"பிழைக்கத் தெரியாதவன்" என்று என்னைப் பற்றி பலரிடம் அவன் சொல்லியிருந்ததும் எனக்குத் தெரியும்.

புதுக்காட்டு தோட்டத்துக்கு பஸ்போய் சேர இன்னும் ஒரு மணித்தியாலம் ஆகும்! அதாவது மாலை நான்கு அல்லது நான்கரையாகும்!

கண்டியிலிருந்து போகும் பஸ் புதுக்காட்டுக் கொழுந்து மடுவத்தைத் தாண்டி வரும் 'மொடக்கில்' தான் பஸ் நிறுத்த வேண்டும். நாங்கள் இறங்க வேண்டும்!

கொழுந்து மடுவத்திலேயே பஸ்ஸை நிறுத்தி இறங்க வேண்டும். அங்கே கொழுந்து நிறுக்க வரிசையாக நின்றிருக்கும் இளம் பெண்கள் தன்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காக, பஸ்-ஸில் ஏறியது முதல் மாறி மாறி ரைவருக்கும், கண்டக்டருக்கும் சிகரட் கொடுத்துக் கொண்டும், பஸ்ஸில் 'புட்போர்ட்' டில் நின்று ஆட்கள் இறங்கியதும், ஏறியதும் 'ரைட்' சொல்வதுமாக வரும் சுந்தரத்தைப் பார்க்கச் சிரிப்பாக இருக்கும்!

அப்படி ஒரு ஆசை சுந்தரத்துக்கு!

கறுத்த முகத்தில் கறுப்புக்கண்ணாடி, டாக்டர் போல் வெள்ளை ரவுசர், வெள்ளை சேர்ட், ஜேம்ஸ் பொண்ட் பெல்ட், தங்கச் செயின் போட்ட ரிஸ்ட் வோச், பாம்பு படம் எடுக்குமாப் போல் இரண்டு விரல்களில் வெள்ளி இமிடேசன் மோதிரம், பூட்ஸ் சப்பாத்து இத்தியாதிகளுடன் பஸ்ஸின் 'புட்போர்ட்'' டில் பயணம் செய்கிறானே, அவன் தான் சோக்கு சுந்தரம்!

அவன் நினைத்தது போல் பஸ்சும் கொழுந்து மடுவத்தில் நின்றது...... இறங்கினான். நான் பஸ்ஸின் மூலையில் இருந்து எழுந்து பெல் அடித்து அடுத்த மொடக்கில் உள்ள பஸ் ஸ்டாப்பில்தான் இறங்கினேன்.

விடிந்தால் தீபாவளி!

கொழுந்து நிறுக்கும் வரிசையில் நின்றிருந்த அம்மா, சுந்தரம் இறங்குவதைக் கண்டு, 'நான் வரவில்லை என்ற ஏக்கத்துடன், வீட்டுக்குத் திரும்பும் போது 'அம்மா' என்றேன். அம்மாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை!

"என்னடா நீயுந்தான் கொழும்புல



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைசெய்ற. சுந்தரம் பஸ்ஸவிட்டு எறங்கையில பார்த்தேன். கையில் தங்க உருலோசு என்னா. கறுப்புக் கண்ணாடி என்னா. வெள்ளையும் சொள்ளையுமா டாக்டர் மாதிரி வந்து எறங்கினான். நீ என்னடான்னா மொட்டையா வந்திருக்க, சாப்பிடுறியோ என்னமோ கழுத்தெல்லாம் நீண்டு போய் இருக்கு" என்று அம்மா ஏங்கியது இன்றும் என்னால் மறக்க முடியவில்லை!

"இந்த மாசம், 'சீட்டு' போட்டு எடுத்து வச்சிருக்கேன். எடுத்துக்கிட்டுபோய் கைக்கு நல்ல உருலோசு ஒன்னு வாங்கிக்கட்டிக்க' என்று அம்மா சொன்னது நெஞ்சில் நெருப்பாச்சுட்டது.!

சுந்தரம் வந்ததிலிருந்து அவர்கள் வீட்டில் கோழிக்கறிதான். கையில் இருக்குற காசு கரையும்போது, கோழி, டின்மீனாகி, மீன் கருவாடாகி, கருவாடு நெத்திலியாகி, நெத்திலி முட்டையாகி, முட்டை மரக்கறியாகி, மரக்கறி தேங்காய்ச் சம்பலாகிச் சாப்பிடும் போது தான் கொழும்புக்குப் போக பஸ் செலவுக்கு எங்கள் அம்மாவிடம் கடன் வாங்கும் சுந்தரத்தைப் பற்றித் தோட்டத்தில் எல்லாருக்கும் தெரியும்!

'தீபாவளி' முடிந்த ஒரு நாளில் கொழும்புக்கு வந்து விட்டேன்! இரண்டு வாரங்களுக்குப் பிறகு, இரவு சாப்பிட, ஆரியபவானில் சாப்பிட்டு அலுத்துப் போய், வாணிவிலாசுக்குப் போனேன்!

சுந்தரம் அங்கே என்னைக் கண்டு சிரித்தபடி, 'அங்க சம்பளம் பத்தாது. அதான் இங்க வந்திட்டேன். இன்னைக்குத்தான் வேலைக்கு வந்தேன்' என்றான்.

நானும் சிரித்துக் கொண்டேன்.

டொக்டர் எனக்கு
வலக்கால் கடுமையா
வலிக்குது

வயசு போனா
அப்பிடித்தான் இருக்கும்

அதெப்பிடி அதே
வயசுதானே
இடக்காலுக்கும்,
அதேன் வலிக்கேல்லை
??????????





# கில்லி



மதுரை ஜில்லாவின் அரசியல் களத்தின் ஒரு அரசியல் வாரிசின் அப்பட்டமான அடாவடித்தனத்தை வெளிக்காட்டிய திரைப்படம் நடிகர் விஜய் நடித்த 'கில்லி'. அந்த அரசியல் வாரிசுவின் காடையர் ஆட்சியினைச் சித்தரித்த படம் அதுவாகும். விறுவிறுப்பான கதைப் போக்கை ஏற்படுத்திய படத்தொகுப்பு நுட்பமும், வில்லனாக வந்த பிரகாஷ்ராஜின் நடிப்பும், ஒவ்வொரு இக்கட்டான சந்தர்ப்பத்திலும் புத்தி சாதுரியத்தோடு கதாநாயகன் தப்பும் காட்சிகளும் இப்படத்தின் உச்சக் கட்டச் சிறப்புகள் என்று பேசப்பட்டன. தட்டிக் கேட்க யாருமின்றி, பட்டப் பகலிலேயே மக்கள் செறிந்திருக்கின்ற இடங்களில் எடுக்கப்பட்ட பல காட்சிகளை நம்மில் பலர், சரியான சினிமாத்தனமான காட்சி என்று நிச்சயமாக மனதுக்குள் நினைத்திருப்போம். ஆனால் சமீபத்தில் அந்தப் படத்தின் நாயகனான விஜய்க்கு நடந்த அனுபவத்தைக் கேட்ட பின்னர், தமிழ்ப் படங்களின் சினிமாத்தனத்தைப் பற்றிய எங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள வேண்டியதாகிவிட்டது.

நடிகர். விஜய் அடுத்த நாலைந்து வருடங்களுக்கு கோல்ஷீட் புக் பண்ணப்பட்ட ஒரு வெள்ளி விழா நடிகர். அவருக்கும் அவருடைய தந்தையும் மனேஜருமான சந்திரசேகருக்கும் முதலமைச்சர் கருணாநிதியின் பேரனிடம் இருந்து அழைப்பு வந்தது. ஸ்டாலினின் மகனான அவரும் ஒரு அரசியல் வாரிசுதானே. அவர் படம் பண்ணப் போகிறாராம், அதை விஜய் வந்து நடித்துக் கொடுக்க வேண்டும் என்பது அவரது ஆவல். தனக்கிருக்கும் கோல்ஷீட் பிரச்சினையைப் பற்றி விஜய் கூறியிருப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலத் தெரிகிறது. எப்படியோ அவர்களை தன் வீட்டுக்கு (ஸ்டாலினின் வீடு) வரவழைத்தார் மு.காவின் பேரன்.

ஸ்டாலின் வீட்டில் சந்திரசேகரும் விஜய்யும் காத்திருக்க விடப்பட்டார்கள். சிறிது நேரத்தின் பின்னர் சந்திரசேகரை தனியாக ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார்கள். எதிர்பார்த்ததைவிட அதிக நேரத்தின் பின்னர் அவர் திரும்பி வந்தார். முகத்தில் ஈயாடவில்லை, குனிந்த தலையும் நிமிரவில்லை. தொடர்ந்தும் காத்திருந்த மகனுடனும் அவர்





ஒன்றுமே பேசவில்லை. அடுத்து விஜய்யையும் தனியாக அதே அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். அங்கு விஜய் கண்ட காட்சி அவரை நிலைகுலைய வைத்தது. ஐந்தாறு வில்லன்மார் அங்கு அமர்ந்திருந்தார்கள். அவர்கள் ஒன்றும் தமிழ்ச்சினிமா வில்லன்கள் அல்ல, அச்சு அசல் காடைக் குண்டர்கள்

"வாங்க சார் எங்க நம்பர் வன் ஹீரோ இல்ல, சார் வாங்க..." என்று அவர்கள் வரவேற்றார்கள்?? "எப்படி சார் உங்க படத்திலயெல்லாம் வில்லன்களைப் பின்னி எடுக்கிறீங்க? ...ஹ...செய்து காட்டுங்க சார்... எப்படி சார் உங்க அடிக்கு அவங்க பத்தடி தூரத்தில போய் விழறாங்க?.. எங்க செய்து காட்டுங்க பாப்போம்.." என்று கூறிய வண்ணம் விஜய்யை நெருங்கி அவர் தோளையும் தட்டி தங்கள் தோளையும் அடித்துக் கொண்டார்கள். "எப்பிடி சார் வெட்டுறீங்க? வேணுமின்னா அரிவாளைத் தரட்டுமா? வெட்டிக் காட்டுங்க சார்.... என்றனர்.

தனக்கு அங்கமெல்லாம் நடுக்கம் எடுத்ததாக விஜய் தனது நண்பர்களுக்குப் பின்னர் கூறியிருந்தார். தன்மானம் மிக்க தனது தந்தை தனக்கு நேர்ந்ததை வாய் திறந்து கூற முடியாத அளவுக்கு, ஏதோவொரு அசம்பாவிதம் அங்கு நிகழ்ந்திருக்க வேண்டும் என்று அவர் கருதினார்.

குண்டர்களின் 'கில்லி' நாடகம் முடிய வெளியே வந்த விஜயை "தற்செயலாக" அந்தப் பக்கமாக வந்த ஸ்டாலின் கண்டார். என்ன இந்தப் பக்கம் என்று அவர் குசலம் விசாரிக்க, அப்பா நான் படம் எடுக்கும் விஷயம் தொடர்பாகத்தான் அவர் வந்திருக்கிறார் என்று மகன் முந்திக் கொண்டு விளக்க, ஒரே விருந்தோம்பல் மயம்தான் போங்கள், படமா, பிரச்சினையே இல்லை, 'கோல்ஷீட் போட்டுக் கொடுத்துடுங்க' என்று ஸ்டாலின் கேட்டபோது விஜய்க்கு மறுக்க முடியுமா!! அந்தப் படத்தின் இயக்குனராக இவரைப் போட்டால் நன்றாக இருக்கும், கதாநாயகியாக அவரைப் போட்டால் நன்றாக இருக்கும் என்பது போன்ற கண்டிசன்களை மட்டும் போட்டுவிட்டு வெளியேறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருப்பு

# கவையாகிக் கொம்பாகி



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

இறந்தபிறகும் வீட்டுக்கு வரும்
மரங்களைப் போலவா
நம் வாழ்வு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒவ்வொருவருடைய சிறிய ஆக்கபூர்வமான செயல்களின் மூலம் உருவாகுவதே சமாதானமாகும்.

### அரங்கத்தின் மூலம் புரிந்துணர்வு

சிங்கள,தமிழ், முஸ்லீம் இளைஞர்களும் யுவதிகளும் ஒன்றாக பங்குபற்றும் அரங்காக Inter Act's திகழ்கின்றது. அதன் இணைப்பாளரான சபீர் அவர்கள் இம்முறை Nobody's Faces என்னும் இருமொழி நாடகத்தினை கம்பஹா மாவட்டத்தின் கிரிந்திவெல்ல கிராமத்தில் அரங்கேற்றினார். 'இது வெறும் நாடகமல்ல, எங்கள் வாழ்க்கையின் ஓரங்கமாகும். உண்மையான நட்பை அது உருவாக்க முனைந்தது. எங்களால் முடியும் என்றால் ஏன் மற்றவர்களால் முடியாது' என்று கேட்கிறார் நதீக்கா.



நன்றி
FLICT



21, Siripa Lane, Colombo 05, Sri Lanka
Phone : +94 (0)11-2555247/8, Fax : +94 (0)11-2555249
Email : flict@sltnet.lk

FLICT

# ONE STOP STUDIO FOR ALL YOUR REQUIREMENTS

**Saara Media House**

#3 Torrington Avenue,
Colombo-07
Sri Lanka.
Tel : 0094 602150836
Mob : 0094 773933744
Fax : 0094 112585190
e.mail : saaramedia@yahoo.com

STUDIO / SERVICES

## AUDIO & VIDEO PRODUCTIONS


RECORDING , PROMOS , JINGLES , TV SPOTS , CUSTOM MUSIC , MIXING & MASTERING , VOICEOVER DEMO , VOICEOVER RECORDING MIXASSIST ™ SERVICES / MIX EVALUTION , AUDIO REPAIR / RESTORATION

Major - label quality and Indie - friendly rates at one of the premier recording studios in Sri Lanka

## COMMERCIALS , ENTERTAINMENT OR AWARENESS RAISING

SPECIAL

SCRIPT & COPY WRITING SERVICES , DRAMA , EDITING , SHORT FILMS , FEATURE FILMSDOCUMENTARIES , TV COMMERCIALS , NEWS STORIES , SHORT & LONG PRODUCTION




LOCATION




Digitized by Noolaham Foundation.

printed by: United Merchants Printers (Pvt) Ltd. Tel: 011-3434281